விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

WESTERN UNION
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகளுக்கு
உறவுகளுக்கு நிதி தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C9575)

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 19 திங்கட்கிழமை (03.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 228

தண்ணீரைத் தர மறுக்கவில்லை நியாயத்தைக் கூறினேன்

யாழ்ப்பாணத்தில் சிறீதரன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இரணைமடு குளத்து நீரை யாழ்ப்பாணத்துக்குத் தர நான் மறுக்கவில்லை. மாறாக நியாயத்தைக் கூறி னேன் என முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்ட 23

பாரிய வர்த்தக நகர திட்டத்தில் யாழ்.மாவட்டமும் உள்ளடக்கம்

ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு

(அம்பாந்தோட்டை)

சர்வதேச தொடர்பு மையமாக அபிவிருத்தி செய்வதற்கு உத் தேசிக்கப்பட்டுள்ள 'நான்கு பாரிய நகர' திட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட் டத்தையும் இணைக்கவுள்ளதாக 23

இந்தியாவின் உத்தரபிரதேச கல்வி அமைச்சர் கொரோனாவால் பலி

23

வவுனியாவில் பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவில் அமைந் துள்ள கட்சி அலுவலகம் ஒன் றின் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு 12.20 மணியள வில் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இம்முறைபாராளு மன்ற தேர்தலில் 23

எமதருமை தமிழ் மக்களே!

உரிமையை வென்றெடுக்கும் தலைமையை வழங்க நாம் தயார்

ஆணை தாருங்கள்

நீதியரசர் விக்னேஸ்வரன் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

இன அழிப்புக்கு உட்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தின் உரிமைகளை வென் றெடுப்பதற்கு சலுகைகளுக்கு அடிபணியாத, ஊழல் அற்ற கொள்கை, பற்றுறுதி கொண்ட ஒரு அரசியல் தலைமைத்துவமே இன்று அவசியம். அத்தகைய ஒரு தலைமைத்துவத்தை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

இதற்கான அதிகாரத்தையும் ஆணையையும் ஆதரவையும் இந்த தேர்தலின் ஊடாக வழங்குங்கள் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அறைகூவல் விடுத்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

அரசியலமைப்புப் பேரவை இன்று கூடுகிறது

(கொழும்பு)

அரசியலமைப்பு பேரவையின் கூட்டம் அதன் தலைவரும் எட்டாவது பாராளுமன்றத்தின் முன் னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தலைமையில் இன்று நடைபெறவுள்ளது. 23

புதுக்குடியிருப்பு பகுதியில்

வேட்பாளர் உட்பட நால்வர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக் குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட 23

வாக்குரிமையை உபயோகிக்கத் தவறினால்

ஏகாதிபத்திய யுகத்துக்கே செல்ல நேரிடும் – ரணில்

(கொழும்பு)

நாட்டு மக்கள் தமது வாக் குரிமையை புறக்கணித்தால் அல்லது உபயோகிக்கத் தவறி னால் மீண்டும் ஏகாதி பத்திய யுகத்திற்கே 24

போலியான அமைப்புகளின் பெயரில்

நீதியரசருக்கு எதிராக வதந்திகள் பரப்பப்படலாம்

எச்சரிக்கையாக இருக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 5ஆம் திகதி நடை பெறப் போகும் பொதுத் தேர்தலில் நீதியரசர் 23

தேர்தல் சட்ட மீறல்கள்

வட மாகாணத்தில் அதிகளவில் பதிவு

(யாழ்ப்பாணம்)

2020ஆம் ஆண்டு பாராளு மன்றத் தேர்தலில், அதிகள வான தேர்தல் சட்ட மீறல் சம்ப வங்கள் வட மாகாணத தில் பதிவாகியுள்ள 24

தனிமைப்படுத்தப்பட்ட கைதிகள் தப்பியோட்டம்

பக்கம் 03

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவு

பக்கம் 19

கொரோனாவிலிருந்து மீண்டெழுவது கடினம்

பக்கம் 10

கொழும்பு முழுவதையும் சுற்றி வளைப்போம் – ஞானசாரர்

பக்கம் 03

உச்சபட்ச பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது அனைவரும் வாக்களிக்க வேண்டும்

மகிந்த தேசப்பிரிய கோரிக்கை

(கொழும்பு)

உச்சபட்ச பாதுகாப்புடன் வாக் களிப்பிற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. எனவே பயமின்றி வருகை தந்து அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் 23

சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுவதற்கு நேர்மையான அரசியல் தலைமை தேவை

வேட்பாளர் சிற்பரன் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் அணிதிரண்டு தம் உரிமைக்காகக் குரல் கொடுப்பார்களாயின், அதற்கு சர்வ தேசத்தின் ஆதரவும் பக்கபலமும் நிச்சயம் கிடைக்கும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் வேட்பாளரும் நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியின் உபசெயலாளரு மாகிய தவச்செல்வம் சிற்பரன் தெரி வித்தார்

நேற்றைய தினம் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் இன்றைய தேவை மற்றவர்கள் மீது குறை கூறுவது அல்ல.

மாறாக, தமிழினத்தின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான வியூகங்களை அமைப்பதுதான்.

எம் இனத்துக்கான உரிமை என்பது காலம் கடத்தப்படுவதனூடாக நீற்றுப் போகச் செய்யப்படுகிறது.

எனவே அனைத்து தமிழ் மக்களும் நிதானமாகச் சிந்திக்க வேண்டிய காலம் இது. சர்வதேசத்தின் துணையின்றி எமது உரிமைப் பிரச்சினை தீரப்போவதில்லை.

எமது உரிமையை வென்றெடுப்பதற் கான அடிப்படை தேவை நேர்மையான - பற்றுறுதிமிக்க அரசியல் தலைமையாகும்.

அந்த நேர்மையான அரசியல் தலை மையை தரக்கூடிய ஒரே தலைவர் நீதி யரசர் சி.வி விக்னேஸ்வரன் என்பதை நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வீர்கள்.

யுத்தம் முடிந்து 10 ஆண்டுகள் கடந்து விட்டதாயினும் எம் இனத்திற்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

எமக்கான நீதியைப் பெற்றுக் கொள் வதில் நாமே உறுதியாக இருக்க வேண்டும்

எனினும் நம் அரசியல் தளத்தில் இருந்தவர்கள் அந்தப் பணியை செய்யாத காரணத்தால் இப்போது எம் இனத்தின் மீது பல வழிகளிலும் நெருக்குதல்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

எனவே சர்வதேசத்தின் ஆதரவை நமதாக்கி எமக்கான உரிமையைப் பெற் றுக் கொள்ள தமிழினத்தின் தலைமை யை நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களிடம் ஒப்படைப்பதே ஒரே வழி யாகும் என்றும் சிற்பரன் தெரிவித்தார். (ஞா)

தண்ணீரைத் தர...

இரண்டு மடுக்களை இணைத்து இரணைமடுவாக ஆங்கிலேயர்கள் ஒரு குளத்தைக் கட்டினார்கள். குளம் உருவாக் கப்பட்ட பிற்பாடு அந்தக் குளத்தைச் சூழ மக்கள் அந்த தண்ணீரை நம்பி குடி யேறினார்கள். யாழ்ப்பாணத்திலும் ஆங் கில மொழிமூலம் படித்த எட்டாம் வகுப் பிற்கு மேல் சித்தி பெற்றவர்களை காணி கொடுத்து அங்கே குடியேற்றினார்கள். அந்தக் குடியேற்ற திட்டத்தில் யாழ்ப்பாண த்தில் பல ஊர்களில் இருந்தவர்களும் அங்கு குடியேற்றப்பட்டார்கள். அதனை விட 1956,1983 ஆம் ஆண்டு தென் பகுதியில் ஏற்பட்ட வன்முறைகளாலும் பெரும்பகுதியான மக்கள் அந்த மண்ணி லே வந்து குடியேறினார்கள் . இன்றைக்கு மலையக பகுதிகளில் இருந்த பல மக்கள் குடியேறி வாழ்கின்றார்கள். இவ்வாறு காலத்துக்கு காலம் விவசாயம் செய்து கொண்டு வருகின்ற போது இப்போது 42 ஆயிரம் ஏக்கர் வயல்கள் அக் குளத்துக்கு கீழ் விவசாயம் செய்யக்கூடிய நிலம் உள்ளது

42 ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்தில் 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்திற்கு மட்டுமே நீர் பாய்ச்சக் கூடிய வாய்க்கால்கள் உண்டு. மிகுதி 22 ஆயிரம் ஏக்கர் களும் மானவாரி நிலங்கள். வர்ய்க் கால்கள் உள்ள 20 ஆயிரம் ஏக்கர் வயல்களில் ஆகக் கூட 15 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே சிறு போகம் செய்யக் கூடியதாக உள்ளது. இது புனரமைப்பு செய்வதற்கு முதல் 7000அல்லது 8000 ஏக்கர்களாக இருந்தது. அதிலும் கடந்த வருடம் 15 ஆயிரம் ஏக்கர் விதைத்து இறுதி நேரம் தண்ணீர் இல்லாமல் குளத்தில் வெட்டித்தான் தண்ணீர் எடுத்தார்கள். குடிக்கவும் தண்ணீர் வைத்திருக்க வில்லை. குளத்தில் கடைசி 10 அடி தண்ணீர் வைத்திருக்க வேண்டும் என்கின்ற விதி உண்டு. காரணம் மாடுகள் உயிரினாங்கள் குடிப்பதற்காக அதனையும் தாண்டி கடந்த முறை தண்ணீரை எடுத்தார்கள்.

உங்களில் எத்தனை பேருக்கு தெரி யும் கிளிநொச்சியில் உள்ள பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. மாரிகாலத்திலும் கோடை காலத் திலும் இப்போதும் நீர்த்தாங்கிகளிடையே நீர் விநியோகிக்கப்படுகிறது.

அங்கு கூட இரணைமடுக் குளத்தில் இருந்து நீர் விநியோகிக்கப்படுவதில்லை. கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு ப்பட்ட கல்லாறு போன்ற பகுதிகளில் குடிக்க தண்ணீர் இல்லை.

கிளிநொச்சியில் தண்ணீர் இல்லை. குடிக்க, விவசாயம் செய்ய தண்ணீர் இல்லாத நிலையில் யாழ்ப்பாணத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டால் இங்கே ஒரு விரோதத்தை கட்டி வளர்க் கலாம். இதனை அரசாங்கம் திட்ட மிட்டு செய்தது. இத னை அரசியலாக சிலர் காவிச் செல் கின்றார்கள்

நான் யாருக் கும் தண்ணீர் தர மாட்டேன் என்று சொல்லவில்லை. நியாயத்தை சொன் னேன். அதனை விட அங்கு உள்ள விவசாயியார்என்று பார்த்தால் இரணை மடுவின் கீழ் உள்ள வயல் காணிகளில் 60 வீதமானவை யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் களு டைய காணிகள் குத்தகைக்குதான் அங்கு கொடுத்திரு க்கிறார்கள்.

அங்கு பயிர்ச் செய்கையை நிறுத் தினால் பொருளா தாரம் விழும். யாழ் ப்பாணத்திற்கான அரிசி வழங்கல் வீழ்ச்சி பெறும் என் றார். (ஞா-312)

அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்கு புறம்பானது

பிரதமர் மகிந்த நிராகரிப்பு

(அம்பாந்தோட்டை)

அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக் கப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்கு புறம்பானது. எதிர் தரப்பினரது போலியான குற்றச் சாட்டுக்களுக்கு வாக்களார்கள் கவனம் செலுத்த வேண்டாம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை நகரில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கோ விட்-19 வைரஸ் தாக்கத்தினால் பொருளா தார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபாவை அரசாங் கம் மீள பெற்றுக் கொள்ளவுள்ளதாக போலியான செய்தி குறிப்பிடப்படுகிறது. மக்களுக்கு வழங்கிய நிவாரண நிதியை ஒருபோதும் மீளப் பெற்றுக் கொள்ள மாட் டோம் என்பதை நிதியமைச்சின் பொறுப் பில் இருந்து உறுதியாக குறிப்பிட்டுக் கொள்கின்றேன்.

இடம் பெறவுள்ள பொதுத்தேர்தலின் பெறுபேறுகள் பல அடிப்படைப் பிரச்சினை களுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதாக அமைய வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்ற வேண்டும் என்பதை பலமுறை காரணி களுடன் எடுத்துரைத்துள்ளோம்.

தேர்தலில் வாக்களிக்கும் போது, மக்கள் நாட்டின் எதிர்காலத்தை கருத்திற் கொள்ள வேண்டும். அரசாங்கத்துக்கு எதிராக எதிர்த் தரப்பினர் முன்வைக்கும் போலியான குற்றச்சாட்டுக்கள் மீது கவனம் செலுத்த வேண்டாம் என்றார். (ஞா)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி **செம்மனச்செல்வி உமாகரன்**
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
வைத்திய கலாநிதி
தியாகர் திருநாவுக்கரசு
(சட்டத்தரணி)
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ யாழ்ஃ இந்து மகளிர் கல்லூரி

(C-9986)

தசாக கிருஹயக்ஞ அழைப்பு

கடந்த 28.07.2020 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி
ஸ்ரீமதி. வசந்தகுமாரி (ராணி) விக்னராஜக் குருக்கள்
அவர்களின் தசாகாதி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

05.08.2020	புதன்கிழமை	தசாகம்	முற்பகல் 10.00
06.08.2020	வியாழக்கிழமை	ஏகோதிஷ்டம், மாசிகம்	முற்பகல் 10.00
07.08.2020	வெள்ளிக்கிழமை	சபிண்டீகரணம்	முற்பகல் 10.00
08.08.2020	சனிக்கிழமை	கிருஹயக்ஞம் (மதியபோசனம்)	
		ஆத்மசாந்திப் பிரார்த்தனை	முற்பகல் 11.00

மேற்படி கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் வீதி,
அச்செழு, நீர்வேலி.

குடும்பத்தினர்

(3468)

நாட்டை நேசிப்பவர்களை தெரிவு செய்யுங்கள்

யாழ்.ஆயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமது நலன்களை புறம் தள்ளி நாட்டை நேசித்து மக்களுக்குப் பணிபுரிய விரும்பும் நேர்மையான வேட்பாளர்களைத் தெரிவு செய்யுங்கள் என யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கேட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிர்வரும் தேர்தல் தொடர்பில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.

முதலில் வாக்களிப்பைப் புறக்கணியாதீர்கள். கொரோனாவிற்குப் பயந்து வாக்களிக்கப் போகாது விடவேண்டாம். வாக்களிப்பது ஒவ்வொருவரதும் உரிமையும் கடமையுமாகும்.

பிழையாக வாக்களிக்காது பதற்றமின்றி சரியான விதமாக வாக்களியுங்கள். சுகாதார அறிவுறுத்தற்படி முகக்கவசங்களை அணிந்து நேரகாலத்தோடு வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று சமூக இடைவெளியைப் பேணி வாக்களித்து விட்டு விரைவாக வீடுகளுக்குச் செல்லுங்கள்.

வாக்களிப்பு நிலையங்களில் பணிபுரிவோர் சிறப்பாக இவற்றைக் கவனித்து வேகமாகச் செயலாற்றுங்கள்.

யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை ஒவ்வொருவரும் எவரது தலையீடோ தூண்டுதலோ இன்றி சுயமாகவும் சுதந்திரமாகவும் எடுக்கவேண்டும்.

தமது நலன்களை புறம் தள்ளி நாட்டை நேசித்து மக்களுக்குப் பணிபுரிய விரும்பும் நேர்மையான வேட்பாளர்களை தெரிவு செய்யுங்கள்.



தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு இத்தேர்தல் முடிவுகள் வழிவகுக்க இறையாசீர் வேண்டுகிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

ஹஜ் யாத்திரையில் கலந்து கொண்ட எவரும் தொற்றுக்குள்ளாகவில்லை

(றியாத்)

சவுதி அரேபியாவில் இந்த ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஹஜ் யாத்திரையில் கலந்து கொண்டவர்களுள் எவரும் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகவில்லை என்று அந் நாட்டின் சுகாதார அமைச்சகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நேற்று ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைந்த இந்த ஹஜ் யாத்திரையில் பொதுவாக உலகெங்கிலுமிருந்து 2 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கலந்து கொள்வர்.

எனினும் கொரோனா பரவல் காரணமாக இந்த ஆண்டு ஹஜ் யாத்திரையில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கை வியத்தகு வரையில் குறைக்கப்பட்டது.

அதன்படி சவுதியிலுள்ள 20 - 50 வயதுக்கு உட்பட்ட வர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவர்களில் எண்ணிக்கை ஆயிரமாக மட்டுப்படுத்தப்பட்டதுடன், அவர்கள் நோயற்ற வர்களாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இந் நிலையில் யாத்திரையில் கலந்துகொள்ள தேர்ந்தெடுக்கப்பட்டோர் 14 நாட்கள் தனிமைப்படுத்தலின் பின்னர் யாத்திரையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

சவுதி அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் வாழ்த்துக்களை தெரிவித்திருந்தார். இந்நிலையில் யாத்திரையில் கலந்துகொண்ட எவரும் கொரோனா தொற்றுக்குள்ளாகவில்லை என்று சவுதி அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது. (ஜ-8)

தனிமைப்படுத்தப்பட்ட கைதிகள் தப்பியோட்டம்

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலையின் மூன்று கைதிகள் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையான கைதிகள் மூன்று பேர் தனிமைப்படுத்தல் செயற்பாட்டிற்காக களுத்துறை சிறைச்சாலையின் தனி இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பின்னர், சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் தப்பிச் சென்ற கைதி ஒருவர் களுத்துறை நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றைய இரு கைதிகளையும் தேடி களுத்துறை வடக்கு பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் இணைந்து கூட்டு செயற்பாடு ஒன்றினை ஆரம்பித்துள்ளனர். (ஜ-4)

பொதுத்தேர்தல் தொடர்பில் மக்களுக்கு முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின்போது வாக்களிப்பின் பின்னர் வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் அல்லது வீதி ஓரங்களில் நிற்பதை தவிர்த்துகொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும் வாக்களிப்பின் பின்னர் வாக்குச்சீட்டுகளை உரிய முறையில் மடித்து வாக்கு பெட்டியினுள் போடப்பட வேண்டும் என அந்த ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், முடிந்தளவு விரைவாகவீடுகள் அல்லது சேவை நிலையங்களுக்கு திரும்ப வேண்டும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் நேரத்தை வீணடிப்பதை தவிர்த்து கொள்ள வேண்டும்.

அனைத்து சுகாதார நடைமுறைகளும் பின்பற்றப்பட்ட முழுமையாக வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன அனைவரும் அச்சமின்றி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியும்.

தேர்தல் இடம்பெறும் தினம் இரவு வாக்கு பெட்டிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மேலதிகமாக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் வாய்ப்பு வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய தேர்தல் அதிகாரப் பகுதியில் தலா இரண்டு பேர் என்ற அடிப்படையில் அனைத்து கட்சிகளுக்கும் வாக்கெண்ணும் நிலையக வளாகத்தில் தமது பிரதிநிதிகளை வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ஜ-4)

பௌத்த மதகுருமார்களை ஒன்றிணைத்து கொழும்பை சுற்றி வளைப்போம்-ஞானசாரர்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்கு நாளை அரசாங்கம் உரிய தீர்வை வழங்காவிட்டால், ஆயிரக்கணக்கான பௌத்த மதகுருமார்களை ஒன்றிணைத்து கொழும்பை சுற்றிவளைப்போம் என பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தில் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த அரசாங்கத்திலும் கிழக்கு முனையம் தொடர்பாக ஒப்பந்தம் செய்வதற்கு முயற்சிக்கப்பட்ட போதிலும் அதனை முதுகெலும்புள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்தார்.

ஆனால் தற்போதுள்ள ஒப்பந்தத்தில் நூற்றுக்கு 51 சதவீதம் இலங்கைக்கும் 49 சதவீதம் ஏனைய நிறுவனங்களுக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 51 சதவீதத்திற்குள் இரு நிறுவனங்கள் உள்ளடங்குகின்றன.



அந்த இரு நிறுவனங்கள் ஜோன்ஸ்டனுடையதா? பி.பி. ஜயசுந்தரவினுடையதா? அல்லது நாமலுடையதா? இதனை நாட்டுக்கு வெளிப்படுத்துங்கள். ஏன் அரசாங்கம் இதுபற்றி தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த தாமதிக்கிறது? தேர்தலுக்கு முன்னர் இதனை வெளிப்படுத்துங்கள்.

உள்நாட்டு துறைமுக சேவையாளர்களுக்கு இங்கு அனைத்து சேவைகளையும் ஆற்றமுடியுமாக இருக்கின்ற போதிலும் ஏன் வெளிநாட்டுக்கு விற்க முனைகிறீர்கள்? இதன் பின்னணியில் யார் உள்ளனர்? அரசாங்கம் இவ்வாறு செயற்பட்டால் மூன்றில் இரண்டு மாத்திரமல்ல.

தற்போதுள்ள பெரும்பான்மையும் இல்லாமல் போகும். தேசிய சொத்தினைப் பாதுகாப்பதற்காக அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர்.

இந்த பிரச்சினைக்கு தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் பதிலளிக்கவில்லை என்றால் நூற்றுக்கணக்கான பௌத்த மத குருமார்களை ஒன்றிணைத்து கொழும்பை சுற்றி வளைப்போம்.

ராஜபக்ஷக்களின் இராணுவத்திற்கு நாம் அஞ்சப்போவதில்லை. எம்மால்தான் அவர்கள் அந்த நிலைமையில் உள்ளனர்" என மேலும் தெரிவித்தார். (ஜ-4)

தமிழ் மக்கள் தேசியக்கூட்டணியினரின் தேர்தல் பிரசாரக்கூட்டம் ஊர்காவற்றுறை தம்பாட்டியில் நேற்றையதினம் நடைபெற்றது.

இலங்கையின் உள்நாட்டு போரின்போது இந்தியாவின் நடவடிக்கையில் சந்தேகம்

(கொழும்பு)

இலங்கையின் போரின் போது இந்தியா சந்தேகத்திற் குரிய பாத்திரத்தை வகித்ததாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் முகம்மது சாத் கட்டாக் இந்தக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் இந்தியா இலங்கையுடன் உண்மையான பரஸ்பர நம்பிக்கை இல்லாத உறவைக் கொண்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில செய்தித்தாள் ஒன்றின் கட்டுரையில் அவர் அதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பல நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியான தமிழீழ விடுதலைப்புலிகளுடனான 16 வருடப் போரின்போது இந்தியா சந்தேகத்துக்குரிய முறையிலேயே செயற்பட்டு வந்தது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய அரசாங்கம் சட்டவிரோதமாக ஆக்கிரமித்த ஜம்மு - காஷ்மீரில் அப்பாவி காஷ்மீர்கள் தியாகிகளாகும் நிலை தொடர்கிறது என்றும் பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

விபத்துக்களில் இருவர் பலி

(கொழும்பு)

அரலகங்வில கீழ் எல்லே வெள பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் அருகில் இருந்த கால்வாயில் மோதியதால் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் மன்னம்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அரலகங்வில பகுதியை சேர்ந்த 28 வயதான இளைஞன் ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மெதிரிகிரிய பகுதியில் சீமெந்து மூடைகளை ஏற்றிச் சென்ற டிப்பர் வண்டி ஒன்று குடை சாய்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் 43 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் டிப்பர் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மெதிரிகிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)

இந்தியா - சீனாவுக்கு இடையில் ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தை

(டில்லி)

லடாக்கின் பாங்கொக் ஏரிப் பகுதியிலிருந்து சீன படைகளை முற்றிலும் விலக்கிக்கொள்ள வைப்பது தொடர்பான ஐந்தாம் சுற்று பேச்சுவார்த்தை சீனாவின் எல்லைக்கோடு பகுதியான மோல்டோவில் ஆரம்பமாகியுள்ளது.

ஜூன் மாதம் கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய - சீன படைகள் இடையே நடைபெற்ற மோதலில் 20 இந்திய வீரர்கள் மரணமடைந்தனர். இதைத் தொடர்ந்து பதற்றத்தை தணிக்க எல்லையில் இரு நாட்டு படைத் தலைவர்கள் அளவிலான நான்கு கட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இதன்போது இரு தரப் பிலிருந்து கணிசமான படைகள் விலக்கிக்கொள்ளப்பட்டன. இந்தநிலையில், லடாக்கின் பாங்கொக் ஏரிக்கரையான வில் பகுதியில் சீனப் படைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பாங்கொங் ஏரியின் வடக்கு கரை உள்ளங்கை போன்றும் அதன் நீட்சி விரல்கள் போன்றும் காணப்படுவதால் அவற்றை ஒன்று, இரண்டு என எட்டு விரல்களாக பெயரிட்டுள்ளனர்.

இப்பகுதி தற்போது பிரச்சினைக்குரிய பகுதியாக காணப்படுகிறது. இங்கு சீனாவின் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. இங்கு கல்வான் பள்ளத்தாக்கில் நடந்தது போன்ற மோதல்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க 5 ஆம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. விரல்கள் பகுதியிலிருந்து சீனப் படைகளை முழுமையாக விலக்குவதில் இந்திய இராணுவம் இந்த பேச்சுவார்த்தையின்போது கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு லடாக்கில் சீன படைகள் பின்வாங்கலை தாமதப்படுத்துவதால் இரு நாடுகளுக்கு இடையேயான இராணுவ மட்டத்திலான பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

சட்டவிரோத நிறுவனங்கள் பொலிஸாரால் முற்றுகை

(கொழும்பு)

அனுமதிப் பத்திரம் இன்றி இயங்கி வந்த சில நிறுவனங்கள் நேற்றுக் காலை பொலிஸாரினால் முற்றுகை இடப்பட்டன.

அதற்கமைய நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் நீர்கொழும்பு , தலங்கம ஆகிய பகுதிகளிலேயே கொரோனா அச்சுறுத்தல்கள் காணப்படும் நிலையில் இவ்வாறு சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரமின்றி இயங்கி வந்த சில மசாஜ் நிலையங்கள் முடக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை சட்டவிரோதமாக குறித்த நிலையங்களில் பணியாற்றிய 14 பெண்கள் உட்பட 18 பேர் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் நேற்றுக் காலை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின் போது போதைப்பொருட்களுடன் 345 பேர் கைது செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: 22 செவ் 10 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. லண்டனில் சொந்தமாக Super market வைத்திருக்கின்றார்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/11023

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 70 செவ் 1 இல் உயரம்: 5'9"
தகைமை/தொழில்: M.Sc (Following), HNDE, B.Eng Mechanical Engineering. Engineer
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உயர் உத்தியோகம் உள்ளவர்கள்
தொ.இ: B/11030

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா: 45 செவ் 5 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MBA(UK), AIB(SL), AMBCS, நிரந்தர வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11032

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 38 1/2 செவ் 6 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. காவலாளி (அரச)
எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11034

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 63 செவ் 1 இல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உயர் உத்தியோகம்
தொ.இ: G/11033

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: செவ் 12 இல் உயரம்: 5"
தகைமை/தொழில்: பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்
தொ.இ: G/11035

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: செவ் 8 இல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/11036

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 30 1/2 சூரி,செவ் 9 இல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L, Diploma in Bharatha Natyam
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் அல்லது வியாபாரம் செய்பவர்
தொ.இ: G/11037

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

இராசிபலன்

03.08.2020
ஆடி 19, திங்கட்கிழமை
பூரணை முன்னிரவு 9.49 மணிவரை
உத்தராடம் முற்பகல் 8.24 மணிவரை
சுபநேரம் 12.04 - 1.34 மணிவரை
இராகுகாலம் 7.34 - 9.04 மணிவரை
சந்திராஷ்டமம்- திருவாதிரை
நல்லூர் கந்தன் மஞ்சம் பூரணை விரதம்

வளவன்

மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கனவு பலிதமுண்டு, இனிமையான நாள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

ரிஷபம்

மனக்குழப்பம் அகன்று மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயான பயமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

கடகம்

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் கிடைக்கும்.

சிம்மம்

போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலன் சீராகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

கன்னி

வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பிள்ளைகள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

துலாம்

செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

விருச்சிகம்

பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

தனுசு

ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

மகரம்

வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள்.

கும்பம்

சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற் றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், இறைவழி பாட்டில் ஆர்வம் கூடும்.

மீனம்

பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

எதையும் துன்பம் என்று நினைத்தால் தான் துன்பம்

சமூக வலைத்தளங்களில் வைரலாகும் ஒரு இலட்சம் சிவலிங்கங்கள்

(டில்லி)

ஒரே கல்லில் செதுக்கப்பட்டதாக கூறும் ஒரு இலட்சம் சிவலிங்கங்கள் உள்ள ஒளிப்படம் சமூக வலைத்தளங் களில் வைரலாகி வருகிறது.

குறித்த புகைப்படங்கள் கர்நாடக மாநிலத்தின் ஆற்றங்கரையில் எடுக் கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்திய வரலாற்றில் முதல் முறை யாக கர்நாடக மாநிலத்தின் சிவாக்ஷி ஆற்றில் தண்ணீர் அளவு குறைந் துள்ளது. இதனால் ஒரு இலட்சம் சிவ லிங்கங்கள் காணப்படுகிறது என வைரல் பதிவுகளில் கூறப்பட்டுள்ளது.

வைரல் பதிவுகளை ஆய்வு செய்த தில், புகைப்படங்களில் உள்ள சிவ லிங்கங்கள் சஹஸ்ரலிங்காவில் எடுக் கப்பட்டவை என தெரியவந்துள்ளது. சஹஸ்ரலிங்கா கர்நாடக மாநிலத்தின் ஷாமலா ஆற்றங்கரையில் அமைந் துள்ள பிரபல வழிபாட்டு தளம் ஆகும். இங்கு ஆயிரம் சிவலிங்கங்கள் உள் ளன.

இந்த தளத்தில் உள்ள சிவலிங் கங்கள் 1678 முதல் 1718 காலகட் டத்தில் செதுக்கப்பட்டவை என சஹஸ்ர லிங்கா தளத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

பீகாரில் வெள்ளம்; 14 மாவட்டங்கள் பாதிப்பு

(டில்லி)

பீகாரில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் 14 மாவட்டங் கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த மாவட்டங்களிலுள்ள சுமார் நான்கு இலட்சத்துக்கும் அதிகமானோர், பாதுகாப்பான இடங்களில் தங்க வைக் கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக 19 முகாம்களில் சுமார் 26 ஆயிரத்து 732 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோருக்கு சமூக சமையற் கூடம் மூலமாக உணவு சமைத்து விநி யோகிக்கப்படுவதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பீகார் மாநிலத்தில் 29 தேசிய, மாநில பேரிடர் அமைப்பை சேர்ந்த குழுவினர் மீட்பு மற்றும் நிவாரணப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஜ-4)

நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா

(குப்பிழான்)

நல்லைக் குமரன் மலரின் 28 ஆவது மலர் வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும், யாழ். மாநகர சபையின் ஆணையாளருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ். மாநகர சபையின் பதில் முதல்வர் து. ஈசன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவன் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திரு முருகன் ஆகியோர் ஆசியுரை களை வழங்கினர்.

விழாவில் நல்லைக்குமரன் மலரினை யாழ். மாநகர சபையின் ஆணையாளர் இ.த. ஜெயசீலன் வெளியீடு செய்து வைக்க தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பிரதிநிதி இ.இராதாகிருஷ்ணன் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

விழாவில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வு நிலை அதிபரும், சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவரும், சிறந்த மொழிபெயர்ப்பாளரும், ஈழத்தின் மூத்த கவிஞருமான சோ.பத்மநாதன் இந்த ஆண்டுக்கான "யாழ். விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்.விருதினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் சம்பிரதாய பூர்வமாக வழங்கிக் கௌரவித்தார்.

அத்துடன் பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (4-5-18)

உற்சவகால வியாபாரிகளுக்கு உதவும் அறக்கொடை நிறுவனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மிக வறுமையான சூழலில் உள்ள வியாபாரிகளுக்கு உதவுவதற்கு வா.தியாகேந்திரன் முன் வந்துள்ளார்.

நல்லூர் உற்சவ காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் நாட்டின் அசாதாரண சூழல் காரணமாக உற்சவ கால வியாபார நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இவ்வாறான தொழில் வருமானங்களையே நம்பியுள்ள, வறுமையான சிறிய வியாபாரிகளின் குடும்பங்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

இந்நிலையில் அவ்வாறான சிறிய வியாபாரிகளின் துயர் துடைக்க தியாகி அறக்கொடை நிலையத்தின் நிறுவுநர் வா.தியாகேந்திரன் முன் வந்துள்ளார்.

எனவே இவ்வாறான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் மிக வறுமையான சூழலில் உள்ள வியாபாரிகள் தாங்கள் தொடர்ச்சியாக நல்லூர் உற்சவ காலத்தில் இவ்வாறான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நல்லூர் நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கட்டளை நிறுவனத்திற்கு வருகை தருமாறு அறிவித்துள்ளார். (8)

யாழ்.கிரிக்கெட் சம்பியன் 2020
யூனியன்ஸ் அணி 2வது சுற்றுக்கு தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிரிக்கெட் சம்பியன்ஸ் 2020 தொடருக்கான முதலாவது சுற்றுப் போட்டி யூனியன்ஸ் அணி மற்றும் ஸ்ரான்லி அணி இடையே நடைபெற்றது.

போட்டியில் யூனியன்ஸ் அணி ஸ்ரான்லி அணியை 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்டான்லி அணி 23 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களை பெற்றது.

போட்டியில் மதன் 20 ஓட்டங்களையும் ஜெனிஸ்ரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் யூனியன்ஸ் அணியின் சுயந்தன் 3 விக்கெட்டுக்களையும் ரகுபதி, தர்ஸன் 2 விக்கெட்டுக்களையும் மோகன்ராஜ் ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 71 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்து இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

போட்டியில் மோகன்ராஜ் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும் ஆகீசன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களையும் ஜானீசன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்டான்லி அணியின் மதன் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். மேலும் இப் போட்டியில் ஜெயதீபனும் சிறிரமணனும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர். (4)

தவறான முடிவெடுத்த மாணவன்

(கரணவாய்)

பதினேழு வயது மாணவனொருவன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்த சம்பவமொன்று கரவெட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இவ்வாறு உயிரிழந்தவர் வடமராட்சி, நெல்லியடி மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் மாணவனாவார். சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-8-60)

கடிகாரம் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மணிக்கூட்டு வீதியிலுள்ள மணிக்கூட்டுக்கோபுர கடிகாரம் ஒரே நேரத்தைக் காட்டிய வண்ணம் பழுதடைந்துள்ளது. அவ் வீதியால் செல்பவர்களில் அநேகர் குறித்த மணிக்கூட்டுக் கோபுரத்தில் நேரம் பார்க்கும் பழக்கமுடையவர்கள். இதனால் உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-8-108)

அமரர் சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்த நிதியத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா கடந்த வியாழக்கிழமை (30.07.2020) ஊரெழு நாவலம்பதி ஞானவைரவர் திருக்கோவில் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதனையும் யாழ். கல்வி வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.அநாதரட்சகன் மாணவன் ஒருவனுக்கு நிதி அன்பளிப்பு வழங்கி வைப்பதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

வாக்களிக்கச் செல்லும் போது
பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் தினத்தன்று ஒவ்வொரு வாக்காளர்களும் வாக்களிக்கச் செல்லும் போது பின்பற்ற வேண்டிய சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில் யாழ்.மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

1.வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லும் போது மூக்கிலிருந்து நாடி வரையான பகுதியை மறைக்கும்படியான முறையில் முகக்கவசம் அணிந்து செல்லுதல் வேண்டும். முகக்கவசம் அணியாத எந்த வாக்காளர்களும் வாக்களிப்பு நிலையத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2.வாக்களிப்பு நிலையத்திற்கு வந்தவுடன் வாக்களிப்பு நிலையத்தின் நுழைவாயிலில் கை கழுவுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் சவர்க்காரமிட்டு குறைந்தது 20 செக்கன்களுக்கு முறையாகக் கைகளைக் கழுவுதல் வேண்டும்.

3.வாக்களிப்பு நிலையத்திற்குள் உட்பிரவேசித்ததில் இருந்து குறைந்தது ஒரு மீற்றர் சமூக இடைவெளியை எப்பொழுதும் பேணிக் கொள்ளுதல் வேண்டும்.

4.வாக்களிப்பு நிலையத்திற்கு வருகை தரும்போது ஆள் அடையாள ஆவணம், வாக்காளர் அட்டை மற்றும் புள்ளடி இடுவதற்காக நீலம் அல்லது கறுப்பு நிறத்திலான பேனாக்களை என்பனவற்றை மட்டுமே கொண்டு வருதல் வேண்டும்.

5.கொரோனா அறிகுறிகளான காய்ச்சல், இருமல், தொண்டைவலி மற்றும் சுவாச இடர்பாடுகள் என்பன தென்படுபவர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு மாலை 4 தொடக்கம் 5 மணி வரையான காலப்பகுதிக்குள் முகக்கவசத்துடன் வருகை தந்து வாக்களிப்பது சிறப்பானதாகும் போன்ற நடைமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஜ-4)

சூட்டுக்காயங்களுடன் யானையின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கலேவெலவில் உள்ள தண்டுபேதிருப்பவில் காட்டு யானையின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட யானையின் வயது சுமார் 35 எனத் தெரிவித்த அதிகாரிகள், மீட்கப்பட்ட யானையின் தலையில் துப்பாக்கிச் சூடு காணப்பட்டதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த யானை இரண்டு நாட்களுக்கு முன்பு உயிருடன் காணப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

வாக்களிக்காமை ஒரு பாவச் செயலாகும்



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் அனைவரும் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றும் வாக்களிக்காது விடுவது பாவச் செயலாகும் என்றும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் எனவும் வாக்களிக்காமல் விடுவது கொடூர பாவம் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.(ஜ-4)

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த முன்னாள் சிறைச்சாலை அத்தியட்சகர் கைது

(கொழும்பு)

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த முன்னாள் சிறைச்சாலை அத்தியட்சகர் அனுருத்த சம்பாயோ கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸ் குழுவொன்றின் முன்னிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் சரணடைந்த நிலையில், இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு சிறைக் கைதிகளுக்கு சொகுசு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்த சம்பவம் தொடர்பாக முன்னாள் நீர்கொழும்பு சிறைச்சாலை அத்தியட்சகர் அனுருத்த சம்பாயோவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டது.

இதனையடுத்து, பணிநீக்கம் செய்யப்பட்ட அவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீர்கொழும்பு பதில் நீதவானால் கடந்த 22 ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

பதினொராயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை
பொருத்திய சாதனை

உங்கள்
கல்யாண மாலை

உலகின் எப்பாகத்திலிருந்தும்
தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்

நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1000/-
சேவைக் கட்டணம் ரூபாய் 300 /-

தொடர்பு – கல்யாணமாலை இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 720 1005, 021 221 5434 (இ) Email : Kalyanamalai.jaffna@gmail.com

பொது இடங்களில் கழிவுகள் போடுவது அதிகரித்துள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப்பகுதி களில்,மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் கழிவுகளை சுகாதார நடை முறையை பின்பற்றாமல் பொது இடங்களில் கொட்டி வருகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை எனவும் பலர் கவலை வெளியிட் டுள்ளனர். (4-5-316)

பார ஊர்தியை வழிமறித்து பணம் கொள்ளை

(கொழும்பு)

கொழும்பில் தங்கொட்டு வவில் இருந்து முல்லைத்தீவு நோக்கி ஓடுகள் ஏற்றிக் கொண்டு சென்ற பார ஊர்தி ஒன்று பன்னல பகுதியில் கொள்ளையர்களால் இடை மறிக்கப்பட்டு பணம் கொள்ளை யடிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்து தெரி யவருகையில்,

புதுக்குடியிருப்பில் உள்ள ஓடு விற்பனை நிலை யத்திற்காக ஓடுகளை ஏற்றி வந்த பார ஊர்தி பன்னல பகுதியில் வந்தபோது உந்து ருளியில் வந்த இருவர் பார ஊர்தியை மறித்து தாங்கள் பொலிஸ் எனத் தெரிவித்து வாகனத்தில் கஞ்சா கடத்தப்படுவதாக கூறி பார ஊர்தியையும் அதில் பயணித்தவர்களையும் சோதனை செய்து அவர்க ளிடமிருந்த 75 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளை யடித்து தப்பிச் சென்றுள் ளார்கள்.

இச் சம்பவம் பார ஊர்தி உரிமையாளர் மற்றும் அதில் பயணித்தவர்கள் பன்னல பொலிஸ் நிலையத்தில் முறை ப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேல திக விசாரணைகளை பன்னல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5)

மரக்கடத்தல் முறியடிப்பு

(முல்லைத்தீவு)

முல் லைத் தீ விலிருந் து யாழ்ப்பாணத்திற்கு கடத்தப் படவிருந்த முதிரைக் குற்றிகள் தருமபுரம் பொலிஸ் பிரிவிற்கு ப்பட்ட நெத்தலியாறு இராணுவ சோதனைச் சாவடியில் நேற்று முற்பகல் இராணுவம் மற்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட் டது.

மரக்கடத்தலுக்கு பயன் படுத்தப்பட்ட வாகனமும் அதன் சாரதி உட்பட மூவரும் தரும புரம் பொலிஸாரால் கைது செய் யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (4-5-8-316)

றொக்கியின் உதவியுடன் கொள்ளையர்கள் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் பகுதி யில் வீடொன்றுக்குள் புகுந்து வாளை காட்டி அச்சுறுத்தி நகை மற்றும் பணத்தை கொள்ளை யிட்ட கும்பலை கோப்பாய் பொலிஸாரின் றொக்கி என்ற மோப்ப நாய் சுமார் 6 கிலோ மீற்றர் தூரம் சென்று கண்டுபிடித்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதா வது,

கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் அதிகாலை புகுந்த கொள்ளை கும்பல் வீட்டிலிரு ந்தவர்களை வாளை காட்டி அச்சுறுத்தி நகை மற்றும் பண த்தை கொள்ளையடித்து சென் றது.

சம்பவம் தொடர்பாக பாதிக் கப்பட்டவர்களால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வழ ங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப் படையில் கோப்பாய் பொலி ஸாரின் றொக்கி என்ற நாயைப் பயன்படுத்தி சுன்னாகம்- பகு தியில் உள்ள வீடொன்றினை நோக்கி மோப்ப நாய் சென் றிருந்த நிலையில் குறித்த வீட்டின் உரிமையாளரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்ட தையடுத்து கைது செய்யப்ப ட்டதுடன் வீட்டிலிருந்து நகை மற்றும் பணம் மீட்கப்பட் டன. (5-8)

பல வருடங்களாக புனரமைக்கப்படாத கண்டாவளைப் பெரிய குளம்

(கரும்புரம்)

கண்டாவளைப் பிரதேசத் திற்குட்பட்ட பெரியகுளம் பகுதி யிலுள்ள பெரியகுளம் பலவருட காலமாகப் புனரமைப்புச் செய் யப்படாமல் காணப்படுகிறது.

இக்குளத்தின் உட்பகுதி களிலும் பெரும்காடாக மாறியு ள்ளதுடன் இவ் அணைக் கட்டுப் பகுதிகளிலும் பெரும் பற்றைகள்- வளர்ந்து காடு போல் காணப் படுகிறது. இதன் காரணமாக மழை காலங் களில் மழைநீர் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் தேங் கிக் காணப்படுகின்றது.

பெரியகுளத்தில் பற்றை கள் காணப்படுவதால் பல் வேறு குற்றச் செயல்கள் நடைபெறுவதற்கு ஏதுவாக வுள்ளது.

இதனால் இரவு வேளை களில் மக்கள் நடமாடுவதற்கு அஞ்சுகின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டு ள்ளனர். (4-5-316)

சர்வதேச மருத்துவ நல சங்கம் **IMHO** நிறுவனத் தின் நிதிப்பங்களிப்பில் முல் லைத்தீவு மாவட்டத்தின் அக்கராஜன் பிரதேசத்தில் அமைந்துள்ள கோட்டை கட்டியகுளம் மகா வித்தியா லயத்தில் புதிதாக நிர்மா ணிக்கப்பட்ட ஆசிரியர் விடுதி பாடசாலை சமூகத்திடம் வைபவ ரீதியாக கையளிக் கும் நிகழ்வு கடந்த வியாழ

க்கிழமை அதிபர் திருமதி கிருஸ்ண குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் அ. பத்திநாதன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் துணுக்காய் கல்விப் பணிப்பாளர் திருமதி. மாலதி முகுந்தன், **IMHO** நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கு.கிருஸ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து வசதிகள் ஏதுமற்ற நிலையில் வெளி மாவட்டங்களில் இருந்து வருகின்ற ஆசிரியர்கள் மிகவும் சிரமத்துடனேயே கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் கோரிக்கையை ஏற்று **IMHO** நிறுவனத்தினர் இதற்கான நிதிப்பங்களிப்பை வழங்கி யிருந்தனர். (படம்-கண்டாவளை செய்தியாளர்)

தேசத்தின் நம்பிக்கை சிறுவர் கழகம் மற்றும் கிளிநொச்சி பொலிஸார் இணைந்து நடத்திய சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விசேட விழிப்புணர்வு செயற்றிட்டம் கிளிநொச்சி பொன்னகரில் அமைந்துள்ள ஏ.ஒ.ஜீ திருச்சபையினால் நேற்று முன்தினம் நடைபெற்றது.

(படங்கள்-முறிகண்டி செய்தியாளர்)

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 8 திருத் தொண் டர்கள் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் கடந்த வியா ழக்கிழமை அருட்பணியார்களாக அருட்பொழிவு செய்ய ப்பட்டனர். (படம்-மன்னார் செய்தியாளர்)

கொந்தளிக்கும் தென் சீனக் கடல்!

எல்லாக் கடல்களிலும் அலைகள் எழும்பும். தென் சீனக் கடலில் மேலதிகமாகச் சர்ச்சைகளும் கொந்தளிக்கும். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்தச் சர்ச்சைகள் ஓயவில்லை. இந்தச் சர்ச்சைக் கடலுக்குள்தான் ஜூலை 13 அன்று அமெரிக்காவும் குதித்திருக்கிறது.

அன்றைய தினம் அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் மைக் போம்பியோ, 'தென் சீனக் கடலில் சீனா கோரிவரும் உரிமைகளும், கட்டியிருக்கும் கடற்தளாங்களும் சட்டவிரோதமானவை' என்று விமர்சித்திருக்கிறார். ஆனால், இதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளாத சீனா அடுத்த இரண்டாவது நாளே ஜூலை 15, 16 ஆகிய திகதிகளில் தென் சீனக் கடல் தீவுத் தொகுதிகளில் பிரமாண்டமான விமானப்படை ஒத்திகையை நிகழ்த்தியிருக்கிறது. சீனாவின் ஜே-11 பி ரக போர் விமானங்கள் பாராசெல் தீவுகளில் அணிவகுத்திருப்பதைச் செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன. இதனால், ஒட்டுமொத்த சர்வதேச கவனமும் தென் சீனக் கடற்பகுதியை நோக்கித் திரும்பியிருக்கிறது!

தென் சீனக் கடலின் பரப்பு 35 லட்சம் சதுர கிலோ மீற்றர். இரண்டாம் உலகப் போருக்கு முன் இதன் பெரும் பகுதி ஜப்பானிய முடியரசின் ஆதிக்கத்தில் இருந்தன. போரில் ஜப்பான் சரணடைந்தது. அன்றைக்கு சீனா, வெற்றிபெற்ற நேச நாடுகளின் பக்கம் இருந்தது. அப்போது சீனாவை ஆட்சி செய்த கோமிங்டாங் கட்சி இந்தப் பகுதிகளுக்கு உரிமை கொண்டாடியது.

மேலும்,1947ஆம் ஆண்டு தென் சீனக் கடலில் 'உடை கோடு-ஒன்பது' (Nine-dash Line) என்றொரு கடல் எல்லையை நிர்ணயித்து, "அந்த எல்லைக்கு உள்ளே வரும் பகுதிகள் அனைத்தும் சீனாவுக்கே சொந்தம்' என்றது. 1949இல் மா சே துங்கின் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அமைந்த போது, இந்த எல்லை மேலும் அழுத்தமாக வலியுறுத்தப்பட்டது. இதற்கு சாதகமாக வரலாற்றுச் சான்றுகள் இருப்பதாகவும் சொன்னது.

சீனாவை உரசும் ஐந்து நாடுகள்

1950 மற்றும் 1960-களில் தென் சீனக் கடலைச் சுற்றியுள்ள வியட்நாம், பிலிப்பைன்ஸ், தாய்வான், மலேசியா, புரூணை ஆகிய ஐந்து நாடுகளும் இந்த உரிமை கோரலில் கவனம்கொள்ளவில்லை. ஆனால், 1970-களில் அவை விழித்துக்கொண்டன. இப்போதுவரை எதிர்ப்பைக் காட்டிவருகின்றன. தென் சீனக் கடலைச் சுற்றியுள்ள இந்த ஐந்து நாடுகளுடன் சீனா வெகுகாலமாக உரசிக் கொண்டிருக்கிறது. கடல் பகுதிகள் மட்டுமல்ல. ஆளில்லாத பாராசெல், ஸ்பார்ட்லைஸ் முதலான நூற்றுக்கணக்கான தீவுத் தொகுதிகளுக்கான உரிமையிலும் சர்ச்சை இருக்கின்றன. பாராசெல் தீவுகளுக்கு அவற்றின் அருகிலுள்ள வியட்நாமும் தாய்வானும் உரிமை கோருகின்றன. அதேபோல ஸ்பார்ட்லைஸ் தீவுகளுக்கு பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூணை ஆகிய நாடுகள் உரிமை கோருகின்றன.

சீனா இந்தக் கோரிக்கைகளைப் புறந்தள்ளியது. இந்தத் தீவுகளில் தளாங்களை அமைத்துவருகிறது. இராணுவப் பயிற்சி முகாம்கள் நடக்கின்றன. சரி, இந்தப் பகுதி சீனாவுக்கு ஏன் முக்கியமானதாக இருக்கிறது? ஏனெனில், இந்தத் தீவுத் தொகுதி களைச் சுற்றிலும், அவற்றின் அடியாழத்திலும் எண்ணெய் வளமும் எரிவாயுவும் புதைந்து கிடக்கின்றன. கடல்மடி கொள்ளாத மீன்வளம் இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தக் கடல் மார்க்கமாகத்தான் உலகெங்கும் ஏற்றுமதியாகும் சரக்குகளில் மூன்றில் ஒரு பங்கு தத்தமது இலக்கை அடைகின்றன. ஆண்டு தோறும் 250,00,000 கோடி ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் இந்தக் கடல்வழிப் பாதையைக் கடக்கின்றன.



"2014-க்குப் பிற்பாடு சீனா, தீவுத் தொகுதிகளில் அமைத்திருக்கும் கடற்தளாங்களின் பரப்பு 3,000 ஏக்கரைத் தாண்டும்' என்று செயற்கைக்கோள் படங்களின் உதவியுடன் மதிப்பிட்டிருக்கிறது ஓர் அமெரிக்க ஆய்வு நிறுவனம். இப்படியான ஆக்கிரமிப்புகளைத் தடுத்து நிறுத்த தென் சீனக் கடல் நாடுகளால் முடியவில்லை. என்றாலும், அவை சீனாவின் ஆக்கிரமிப்பைப் பலவாறாக எதிர்த்துவருகின்றன. 1974 இலும் 1988 இலும் வியட்நாம், சீனக் கடற்படையுடன் மோதியது. வியட்நாம் மாலுமிகளும் ஜவான்களும் கொல்லப்பட்டார்கள். 2012இல் சீனாவின் சில மீன்பிடிப் படகுகள் எல்லை மீறியதாகச் சொல்லி பிலிப்பைன்ஸ் கப்பலொன்று அவற்றைக் கைப்பற்றியது. தொடர்ந்து கடற்பரப்பில் பதற்றம் பற்றிக்கொண்டது. இரண்டு கடற்படைகளும் நேருக்கு நேர் நின்றன.

2013இல் பிலிப்பைன்ஸ் இந்தப் பிரச்சினையை ஐ.நாவுக்குக் கொண்டு சென்றது. ஐ.நா ஒரு தீர்ப்பாயத்தை நியமித்தது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 2016இல் அந்தத் தீர்ப்பாயம், 'சீனா கோரும் உரிமைகளுக்கு வரலாற்றுரீதியாக ஆதாரம் இல்லை. சீனாவின் ஆக்கிரமிப்பு சட்டவிரோதம்' என்று தீர்ப்பளித்தது. ஆனால், தீர்ப்பை ஏற்க மறுத்தது சீனா. ஐ.நா அமைப்பால் தீர்ப்பு மட்டுமே சொல்ல முடியும். அதை அமுல்படுத்தவோ... அமுல்படுத்த வேண்டும் என்று உறுப்பு நாடுகளை வற்புறுத்தவோ முடியாது. அப்படியான அதிகாரம் அதற்கு இல்லை. இந்தத் தென் சீனக் கடல் நாடுகள் அனைத்தும் தென் கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பான 'ஆசியா'னில் அங்கம்வகிக்கின்றன. கடந்த ஜூன் 26-ம் திகதி அன்று நடந்த ஆசியான் மாநாட்டில் பிலிப்பைன்ஸும் வியட்நாமும் தென் சீனக் கடலில் சீனாவின் போக்குக்கு எதிராகக் குரல் கொடுத்தன.

அமெரிக்கா பராக்!

இந்த நிலையில்தான் சீனாவுக்கு எதிராகக் 'கடல்' இறங்கியிருக்கிறது அமெரிக்கா. 'தென் சீனக் கடல் ஒன்றும் சீனாவின் சாம்ராஜ்யம் அல்ல' என்று கடுமையாகவே சாடியிருக்கிறது. இது போதாதென்று இரண்டு விமானம் தாங்கும் போர்க் கப்பல்களை தென் சீனக் கடலுக்கு அனுப்பியிருக்கிறது. அதேசமயம், அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை தென் சீனக் கடல் நாடுகள் பெரிதாக ஆதரிக்கவில்லை என்பதுதான் ஆச்சர்யம்.

மலேசியா மௌனமாக இருந்தது. எண்ணெய் விலை இறக்கத்தால் துவண்டுபோயிருக்கும் புரூணை சுல்தான் அடக்கிவாசித்தார். 'தாய்வானே அகண்ட சீனத்தின் ஒரு பகுதிதான்' என்று சீனா சொல்லி வருவதால், சுற்றியுள்ள கடற்பரப்பைக் குறித்த தாய்வானின் கோரிக்கைகளை சீனா பொருட்படுத்தாது. அமெரிக்காவின் அறிவிப்பை வியட்நாம் வரவேற்றது. ஆனால் மேலதிகமாகத் தனது குரலை உயர்த்தவில்லை. பிலிப்பைன்ஸ் தனது எதிர்ப்பை அவ்வப்போது காட்டிவரும் நாடு. அமெரிக்க அறிவிப்புக்கு அடுத்த நாளே பிலிப்பைன்ஸ் வெளியுறவு அமைச்சருடன் பேசியது சீனா. வியட்நாம் வெளியுறவு அமைச்சருடனும் ஜூலை 21 அன்று பேசியது. தொடர்ந்து, 'தென் கிழக்கு ஆசிய நாடுகளிடையே கலகம் செய்ய வேண்டாம்' என்று அமெரிக்காவை எச்சரித்தது சீனா.

ஏன் அமெரிக்காவுக்கு ஆதரவு இல்லை?

தாங்கள் ஆண்டாண்டு காலமாகக் கோரிவருகிற உரிமைகளை உலகின் ஆகப் பெரிய ஒரு வல்லரசு ஆதரிக்கிறபோது, ஏன் தென் சீனக் கடல் நாடுகள் ஆதரிக்கவில்லை? 2016இல் ஐ.நா-வின் தீர்ப்பாயம் சீனாவுக்கு எதிராகவும், பிலிப்பைன்ஸுக்கு ஆதரவாகவும் தீர்ப்பளித்தபோது, "இது உள்-கடல் பிரச்சினை. இதை சீனாவும் தென் கிழக்காசிய நாடுகளும் தான் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்' என்றது அமெரிக்கா. தீர்ப்பு வெளியாகி நான்கரை ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவுக்கு இப்போது என்ன திடீர் கரிசனம் என்கிற ஐயம் இந்த நாடுகளுக்கு இருக்கிறது.

வருகின்ற நவம்பரில் தேர்தலைச் சந்திக்க விருக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப். அதற்காக சீனாவை அமெரிக்காவின் எதிரியாகக் கட்டமைத்து வருகிறார். கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சீனாவுடன் வர்த்தகப் போர் தொடுத்துவருகிறார். சீனப் பொருட்களுக்குத் தீர்வை விதிக்கிறார். சீனத் தொழில்நுட்பங்களுக்குத் தடை விதிக்கிறார். "கொரோனா பரவலுக்குச் சீனாவே காரணம்' என்கிறார். ஹொங்கொங் தன்னாட்சி மாநிலத்தில், சீனாவின் ஒன்றிய அரசு தேசியப் பாதுகாப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது. இதனால் ஹொங்கொங்குக்கு வழங்கிவந்த சிறப்புத் தகுதியை திரும்பப் பெற்றுக்கொண்டிருக்கிறார் ட்ரம்ப். இவைபோலவே, இப்போதைய தென் சீனக் கடல் எச்சரிக்கையும் சீன எதிர்ப்பை மையமாக்கி ட்ரம்ப் கட்டியமைக்கும் வாக்கு வங்கியின் ஒரு பாகம் தான் என்கிறார்கள் சர்வதேச அரசியல் வல்லுநர்கள். தென் சீனக் கடல் நாடுகளும் அப்படியே கருதியிருக்கலாம்.

தவிர, அமெரிக்கா-சீனா இடையிலான புதிய பனிப் போரில் தாங்கள் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்றும் அந்த நாடுகள் கருதியிருக்கலாம். சீனாவுடனான தங்களது பிரச்சினையைத் தாங்களே தனியாகவோ அல்லது கூட்டாகவோ, சீனாவுடன் பேசியோ அல்லது உரசியோ தீர்த்துக்கொள்ளலாம், அதுதான் உசிதம் என்பது அந்த நாடுகளின் கருத்தாக இருக்கலாம்.

என்ன நினைக்கிறது இந்தியா?

இந்தப் பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன? 'இது சர்வதேச கடல்வழிப் பாதை. சட்டரீதியான வணிகப் போக்குவரத்துக்கு இங்கு எல்லா சுதந்திரமும் இருக்க வேண்டும்' என்று அறிவித்திருக்கிறது இந்தியா. இந்த அறிவிப்பில் சீனாவைப் பற்றி எந்தக் குறிப்புமில்லை. அமெரிக்காவின் பெயரும் இடம்பெறவில்லை.

இதற்கு முன்னரும், தென் சீனக் கடல் உள்ளிட்ட சீனா தொடர்பான கூறுகளைப் பற்றிக் கருத்து சொல்வதை இந்தியா பெரும்பாலும் தவிர்த்து வந்திருக்கிறது. ஆனால், ஜூன் 15 கல்வான் கலவரத்துக்குப் பிறகு வேறு. அதனால், இப்போதைய இந்தியாவின் எதிர்க்குரல் அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டில் இருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். இந்தியா 'நாற்கரம்' என்கிற அமைப்பில் தனனை இணைத்துக் கொண்டிருப்பதும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அதாவது, அமெரிக்கா - அவுஸ்திரேலியா - ஜப்பான் - இந்தியா ஆகிய நான்கு நாடுகள் அமைத்திருக்கும் கூட்டணியே நாற்கரம் (Quadrilateral-Quad). இது ஒரு சீன எதிர்ப்புக்கூட்டணியாகவே பார்க்கப்படுகிறது.

இன்றைக்கு சர்வதேச உறவுகள் ஆயுத பலத்தால் மட்டுமல்ல. உற்பத்திச் சக்தி, வணிக உறவுகள் முதலான காரணிகளாலும் தீர்மானிக்கப்படுகின்றன. நாம் சர்வதேச அரங்கில் மதிப்பான இடத்தைப் பெறுவதற்கு உற்பத்தியிலும் வணிகத்திலும் மேலான இடம் நோக்கிச் செல்ல வேண்டும். இது உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும். நமக்கு நீண்டகாலப் பயனும் விளையும். தென் சீனக் கடல் நாடுகள் சீன ஆக்கிரமிப்புக்கு எதிராக அப்படியான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகத்தான் தோன்றுகிறது.

தென் சீனக் கடல் கொந்தளிக்கிறது. கடல் மட்டத்தில் தெரியும் கொந்தளிப்புகள் விரைவில் அடங்கிவிடும். அடியாழத்தில் சுழலும் கொந்தளிப்புகள் அடங்க அதிக காலம் வேண்டியிருக்கும்.

கொரோனாவிலிருந்து மீண்டெழுவது கடினம்

(ஜெனிவா)

உலக நாடுகளில் ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸின் தாக்கம் 10 ஆண்டுகளைக் கடந்தும் நீடிக்குமென உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதனோம் கேப்ரியா செஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உலக நாடுகள் நூறாண்டுக்கு ஒருமுறை வரலாறு காணாத சுகாதார பிரச்சினையைச் சந்திக்கின்றன.

அந்த வகையில் தான் தற்போது கொரோனா வைரஸ் முழு உலகையும் ஆட்டிப்படைத்து வருகிறது.

1918ல்இல் "ஸ்பானிஷ் புளு" பல கோடி மக்களை மாய்த்தது. தற்போது கொரோனா வைரஸ் 1.80 கோடிக்கும் அதிகமானோரைப் பாதித்துள்ளது. இதனால் உலக நாடுகளின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

இந்தியாவை உலுக்கும் கொரோனா மேலும் 54,736 பேருக்கு தொற்று

(டில்லி)

இந்தியாவில் நேற்று முன்தினத்துடன் மேலும் 54 ஆயிரத்து 736 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இந்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 17 இலட்சத்து 50 ஆயிரத்து 724ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும் நேற்று முன்தினம் 853 பேர் உயிரிழந்தமையினால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 364ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் இந்தியாவில் 5இலட்சத்து 67 ஆயிரத்து 730 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் 11 இலட்சத்து 45 ஆயிரத்து 630 பேர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதேவேளை தமிழ் நாட்டில் மாத்திரம் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டரை இலட்சத்தைக் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

புதிய அரசாங்கம் 11-ம் திகதி பதவியேற்கும்?

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஆட்சிக்கு வரும் புதிய அரசாங்கம் எதிர்வரும் 11 ஆம் திகதி பதவியேற்கும் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. அன்றைய தினமே அமைச்சரவையும் பதவியேற்க உள்ளது.

அமைச்சரவை பதவியேற்கும் முன்னர் பிரதமர் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார்.

அத்துடன் புதிய நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு இம்மாதம் மூன்றாம் வாரத்தில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 20 ஆம் திகதி கூட்டப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்திற்கு தெரிவாகும் புதிய உறுப்பினர்களுக்கு தேவையான பயற்சிகளை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஜ-4)

வேட்பாளர் மீது அசிட் வீச்சு



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் வேட்பாளராக போட்டியிடும் மொரட்டுவை முன்னாள் மேயர் சமன்லால் பெர்னாண்டோவை குறிவைத்து நேற்று அசிட் திரவம் வீசப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் அவருக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்பதுடன் அவரது காரின் மீது திரவம் வீசப்பட்டுள்ளது.

மொரட்டுவை வாராந்த சந்தைக்கு அருகில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றிருந்த போதே அவர் மீது இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது

இச்சம்பவம் குறித்து மொரட்டுவை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஜ-4)

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் படுகொலை

(கொழும்பு)

கெக்கிராவை இஹலகம பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

33 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)

சிறுவன் கொடூரமாக கொலை!

(கொழும்பு)

கலேவெல - பத்கொல கொல்ல பகுதியில் சிறுவன் ஒருவர் உயிரிழந்த நிலையில், அந்த பகுதியிலுள்ள கால்வாய் ஒன்றின் அருகில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. எட்டு வயதான சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

குறித்த சிறுவனை காணாத உறவினர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து, அந்தப் பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றின் அருகில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

மீட்கப்பட்ட சிறுவனின் சடலம் கலேவெல வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. (ஜ-4)

வாக்காளர் அட்டைகள் பெற வாய்ப்பு மேலும் வழங்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

இதுவரை உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தமது பிரதேசங்களில் உள்ள தபால் நிலையங்களுக்குச் சென்று தமது வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தேர்தலுக்கு முதல் நாளும் தேர்தல் தினத்தன்றும் தங்களது உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியுமென தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், வாக்காளர்களின் முகவரிகளை கண்டறிய முடியாத நிலையில் 4 இலட்சத்து 50 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் மீண்டும் தபால் அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்காளர்கள் தபால் அலுவலகங்களுக்கு சென்று தங்களை அடையாளப்படுத்தக் கூடிய ஆவணங்களை சமர்ப்பித்து வாக்காளர் அட்டைகளை பெற்றுக் கொள்ளுமாறும் தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கை நூற்றுக்கு 99 வீதம் நிறைவடைந்துள்ளதாக தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஜ-4)

365 நாட்கள் முற்றுகையின் கீழ் காஷ்மீர்!

இந்திய சட்டவிரோத ஆக்கிர மிப்பான ஜம்மு - காஷ்மீர் , நவீன உலகம் இதுவரை கண்டிராத மிகக் கொடூரமான, மற்றும் மனிதாபிமானமற்ற இராணுவ முற்றுகையின் கீழ் தனது 365 நாட் களை நிறைவு செய்கிறது. நாகரிக உலகம் என்று தம்மைத்தாமே அழை க்கும் இந்தியாவின் பார்வையின் கீழ், ஒரு பாதுகாப்பற்ற சமூகத்தை கொல் வது, காயப்படுத்துவது, பாலியல் பலாத் காரம் மற்றும் அழிப்பது தடையின்றி தொடர்கிறது. இருந்தும் , இக்கொலைக ளைக் கண்டும் காணாததுபோல் , பல உலகநாடுகள் சில பொருளாதார நலன் களுக்காக கண்மூடித்தனமாக இருப்ப தும் வருத்தமளிக்கிறது.

ஓகஸ்ட் 5, 2019 அன்று, பா.ச.க மோடி அரசு யு.என்.எஸ்.சி, ஜெனீவா மாநாடு ஆகிய அதன் சர்வதேச கட மைகளைத் துண்டித்து தனது அரசிய லமைப்பின் 370 மற்றும் 35 ஏ சட்டப் பிரிவுகளை இரத்து செய்து , சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீரை அதன் சிறப்பு அந்தஸ்தை பறிப்பதன் மூலம் தனது சொந்த அரசி யலமைப்பையே மீறியது. சர்வதேச சமூகம், ஐ.நா மற்றும் ஓ.ஐ.சி. உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புகள், தனி நாடுகள், காங்கிரஸ்கள், பாராளுமன்றங் கள் தங்கள் குரல்களை இதற்கு எதிராக எழுப்பினாலும் இந்திய அரசுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் சரிவர பின்பற்றபடவில்லை.

கொவிட்-19 உலக நாடுகளின் சுகா தார அமைப்புகளை அச்சுறுத்தியது மட்டுமல்லாது கொடிய தொற்றுநோய் என்பதால் உலகளாவிய அவசரநிலை அறிவிக்கப்பட்ட நிலையிலும் , இந்தியா நூற்றுக்கணக்கான மற்றும் ஆயிரக் கணக்கானோர் இறப்பதைப் புறக்க ணித்து அதன் பலவீனம் அடைந்து வரும் சுகாதார அமைப்பை சீர்செய்யா மல் , ஆக்கிரமிப்பு மீதான தனது பிடியை இறுக்கிக் கொள்ளும் வாய்ப்பாக உலக ளாவிய அவசரநிலையை தொடர்ந்து பயன்படுத்தி, காஷ்மீரில் சர்ச்சைக்குரிய சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் காஷ்மீர் சமூகத்தை அடக்கி வந்தது.

சர்வதேச சமூகத்தின் மனச்சாட் சியை உலுக்கிய பாகிஸ்தான் பிரதமரின் கடந்த ஆண்டு செப்டெம்பரில் நடைபெற்ற யு.என்.ஜி.ஏ.வரலாற்று உரை உலக நாடுகள், மன்றங்கள் மற்றும் உலகளா விய சிவில் சமூகத்திற்கு ஒரு சிறந்த



தெளிவை வழங்கியது மட்டுமல்லாமல் ஓகஸ்ட் 5, 2019 இற்கு முந்தைய நிலை க்கு இந்தியா திரும்பவும், ஒரு மில்லி யனுக்கும் அதிகமான பாதுகாப்புப் படை யினரை நிறுத்துவதன் மூலம் சிறை யில் அடைக்கப்பட்டுள்ள 8 மில்லியன் காஷ்மீர் மக்களை விடுவிக்கவும் இந் தியாவை வலியுறுத்தியது. ஆனாலும், சர்வதேச சமூகத்தின் இந்த அழைப்பு களை இந்தியா கடுமையாக புறக்க ணித்தது.

பிராந்திய மட்டத்தில், இந்தியா, இதுபோன்ற நடவடிக்கையின் காரண மாக, சீனாவுடன் கட்டுப்பாட்டு எல்லை யில் தொடர்ந்து முரண்பட்டுக்கொண்டு இருக்கிறது. இதனால் ஏற்கனவே இந் திய வீரர்களின் உயிர்கள் பல காவு கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை நிலைமை ஆபத்தானதா கவே இருக்கிறது. நேபாளத்துடன், நேபாளப் பிரதேசத்தை பலவந்தமாக ஆக்கிரமிப்பதன் மூலம் இந்தியா முர ண்படுகிறது.

பூட்டான் தொடர்ந்து இந்திய மேலா திக்கத்திற்கு பிணைக் கைதிகளாக இருந்து வருகிறது, அங்கு நாடு தனது மக்களின் அபிலாஷைகளின்படி அதன் சுயாதீன வெளியுறவுக் கொள்கையை பின்பற்ற முடியாமல் தவிக்கிறது. குடியு ரிமை திருத்தச் சட்டம் மற்றும் பிற எல்லை மற்றும் நீர் பிரச்சினைகள் போன்ற பிரச்சினைகளால் பங்களாதேஷ் போன்ற ஒரு நட்பு நாட்டை அதன் நிலையை மறுபரிசீலனை செய்ய கட்டாயப்படுத்தியுள்ளன.

இலங்கையுடன், இந்தியா தொடர்ந்து பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஆழ்ந்த மனப்பான்மை இல்லாத நட்புறவை கொண்டுள்ளது, இது 16 ஆண்டுகளு க்கும் மேலாக எல்.ரி.ரி.ஈ. பயங்கரவா தத்திற்கு எதிராக ஆயிரக்கணக்கான அப்பாவி இலங்கை உயிர்களைக் காவு கொண்டது.

ஆப்கானிஸ்தானில், ஒரு இராஜ தந் திர தோல்வியாகவும், பிராந்திய அபி லாஷைகளுக்கு இணையாகவும் பார்க் கும் சமீபத்திய ஆப்கானிய சமாதான முன்னெடுப்புகளை தகர்ப்பதற்காக ஆப் கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் பயங்கரவாத செயல்களை மேற்கொள் வதற்காக தெஹ்ரீக்-இ-தலிபான் பாகி ஸ்தான், ஜமாத்-உல்-அஹ்ரர், ஐ.எஸ். ஐ.எஸ் போன்ற பயங்கரவாத குழுக்க ளுக்கு இந்தியா தொடர்ந்து நிதியுதவி அளிக்கிறது. பாகிஸ்தானுடன், இந்திய சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீரின் நிலையை வலுக் கட்டாயமாக மாற்றுவதைத் தவிர, எல் லையில் வாழும் அப்பாவி பொதுமக் களை குறிவைத்து வழக்கமான அத்து மீறல்கள் மூலம் ஏற்கனவே பதற்றமாக உள்ள உறவை மேலும் மோசமடைய செய்கிறது. இருதரப்பு மோசமடைந்து வரும் அரசியல்/ இராஜதந்திர மற்றும் பாதுகாப்பு உறவுகள் நிச்சயமாக பிரா ந்தியத்தில் இரண்டு அல்ல, மூன்று அணுசக்திகளுக்கு இடையில் ஆபத் தான நிலைகளைக் கொண்டுள்ளன.

பிராந்திய ரீதியாகவும், உலகளாவிய ரீதியாகவும் பாகிஸ்தானை தனிமைப் படுத்த இந்தியா அதன் அனைத்து முய ற்சிகளையும் வளங்களையும் செல வழிக்கும் அதே வேளையில், இந்தி யாவே தனிமைப்படுத்தப்பட்டிருப்பது அதனது தார்மீக, அரசியல் மற்றும் ஜனநாயக கொள்கைகளை தீவிரமாக பாதிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் 70 ஆண்டுகால வர லாற்றில் இதுபோன்ற எதிர்மறை பார் வையுடன் உலகளவில் ஒருபோதும் காணப்படவில்லை. ஒரு காலத்தில் உலகின் மிகப்பெரிய ஜனநாயகமாகக் கருதப்பட்ட ஒரு நாட்டின் உலகளாவிய, பிராந்திய மற்றும் உள்நாட்டு அந்த ஸ்தைப் பற்றி நாட்டிற்குள் உள்ள நல்ல அரசியல், அறிவுசார் மற்றும் மதச்சார் பற்றவர்கள் வேதனையுடன் கவலைப் படுகிறார்கள். இது அனைத்தும் வரலாற் றின் ஒரு பகுதியாக காணப்படுகிறது.

சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீரில் அப்பாவி காஷ்மீர்களை போலி குற்றச்சாட்டுக்கள் மற்றும் பிற சாக் குப்போக்குகளின் பேரில் கொலை செய்வதை இந்திய அரசு தொடர்ந்து



வருகிறது. மேலும் , ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான இந்திய குடிமக்களை சர்ச்சைக்குரிய பிரதேசத்தில் குடியேற்று வதன் மூலம் இந்தியாவால் சட்டவிரோ தமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு மற்றும் காஷ்மீரின் மக்கள் தொகை கட்டமை ப்பை ஒரே நேரத்தில் மாற்றி வருகிறது. இது காஷ்மீரி மக்களை தங்கள் சொந்த நிலத்தில் இருந்து அகற்றவும் அவர் களது வாக்குரிமையை பறிக்கவும் வழிவகுக்கிறது. ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீரிலும் மற்றும் பிற இனங் களுக்கு எதிரான அடக்குமுறை நடவ டிக்கைகளும் இந்திய நிலப்பரப்பில் உலகத்தின் பார்வையின்கீழே தொடர் ந்து வருகிறது.

பாகிஸ்தான், தனது அரசியல் மற்றும் இராஜதந்திர ஆதரவின் மூலம், யு. என்.எஸ்.சி.தீர்மானங்கள், ஜெனீவா மாநாடு, சர்வதேச சட்டம், இருதரப்பு ஒப்பந்தங்கள், மனிதாபிமானமற்ற அடக்குமுறை மற்றும் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு மற்றும் காஷ் மீர் ஆகியவற்றில் மக்கள் தொகை மாற் றங்கள் ஆகியவற்றின் இந்தியாவின் அப்பட்டமான மீறல்களை சர்வதேச சமூகத்திற்கு தொடர்ந்து உணர்த்திக் கொண்டே இருக்கும்.

அச்சு, மின்னணு மற்றும் டிஜிற்றல் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களும் பயங்கர விளைவுகள் ஏற்பட முன் , சர்வதேச மனச்சாட்சியை உலுக்கவும் , சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீரில் நீதி மற்றும் மனித உரிமைகளுக்காக போராடவும் பயன் படுத்தப்படும். பாகிஸ்தான் எப்போதுமே காஷ்மீர் மக்களுக்கு ஆதரவாக நிற்கும். அவர்களும் பாகிஸ்தானை சேர்ந்த வர்களே. ஒவ்வொரு பாகிஸ்தானியரும் காஷ்மீர் மக்கள் தங்கள் அன்பு மற்றும் நேசம் பொருந்திய ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணை க்க விரும்புவதால் தான் சித்திரவதைப்ப டுத்தப்படுவதை அறிவார்கள்.

ஜம்மு- காஷ்மீர் மக்கள் மீது பாகிஸ் தான் எவ்வாறு அலட்சியமாக இருக்க முடியும்? காஷ்மீர் மக்களுக்கு சுயநிர் ணய உரிமையைப் பெற பாகிஸ்தான் எந்த உதவியும் செய்யத் தயார் என்பது ஒரு தேசிய தீர்மானமாகும். இருப்பி னும், பாகிஸ்தான் சர்வதேச நாடுகள் எவ்வாறு இப்பிரச்சினைக்கு பதில் அளிக் கிறது என்பதை பொறுமையாக உற்று நோக்குகிறது.

இந்தியா அமைதியை ஏற்கத் தயா ராக இல்லை என்பதால், எந்த பயனும் இல்லாமல் காலம் கடந்து கொண்டி ருக்கிறது.

பாரதம்

இந்தியாவில் விஷ மதுபானம் குடித்து 80 இற்கும் மேற்பட்டோர் மரணம்

(டில்லி)

இந்தியாவின் வட மாநில மான பஞ்சாப்பில் கடந்த நாட்க ளில் விஷ மதுபானம் குடித்து உயிரிழந்தவர்களின் எண் ணிக்கையானது 86 ஆக உயர் வடைந்துள்ளது.

இந்நிலையில் விச மதுபா னத்தை விற்பனை செய்த குற் றச்சாட்டுக்காக பலர் கைதுசெய் யப்பட்டுள்ளதாகவும் இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

மூன்று மாவட்டங்களில் நடந்த மரணங்கள் குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நிலையில், விஷ மதுபானம் விற்பனையை தடுக்க தவறிய மைக்காக 6 பொலிஸ் அதிகா ரிகள், 7 கலால்வரி அதிகாரி களை முதல்வர் அமரிந்தர் சிங் பணி நீக்கம் செய்துள்ளார்.

தார்ன் தரண் மாவட்டத்தில் மட்டும் 63 பேரும், அமிர்தசர் மாவட்டத்தில் 12 பேரும் குரு தாஸ்பூரில் 11 பேரும் உயிரிழந் தனர் என்று பஞ்சாப் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 25 சந்தேக நபர்கள் விஷ மதுபானத்தை வீதியோர உணவகங்களுக் கும் பயணிகளுக்கும் கிராம மக்களுக்கும் விநியோகம் செய் ததாக பஞ்சாப் மாநில பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இறப்புகள் குறித்து சிறப்பு விசாரணைக்கு உத்தரவிட்ட தாகவும் "குற்றவாளிகள் எனக் கண்டறியப்பட்ட எவரும் காப் பாற்றப்பட மாட்டார்கள்" என்றும் பஞ்சாப் முதல்வர் அமரீந்தர் சிங் அறிவித்துள்ளார். (4)

பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி அளிக்கும் அமெரிக்கா, ஐரோப்பா

ஈரான் குற்றச்சாட்டு

(டெஹ்ரான்)

அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஆட்சிக்கு எதிரான குழுவின் தலைவர் கைது செய் யப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்காவும் ஐரோப்பாவும் பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி அளித்து பாதுகாப்பதாக ஈரா னின் வெளியுறவு அமைச்சர் ஜவாத் ஜரிஃப் தெரிவித்துள் ளார்.

மேற்கு நாடுகள் பயங்கர வாதிகளுக்கு நிதியளிப்பதை நிறுத்த வேண்டும். அமெரிக்கா விலும் ஐரோப்பாவிலும் உள்ள பயங்கரவாதிகளின் பாதுகாப் பான புகலிடங்களிலிருந்து, அவர்கள் வெறுப்பை ஊக்குவிக் கின்றனர்.

அப்பாவி ஈரானிய பொதும க்கள் கொலைக்கு வெட்கமின்றி பொறுப்பேற்கிறார்கள் என்றும் ஈரானின் வெளியுறவு அமை ச்சர் தனது டுவிட்டரில் தெரி வித்துள்ளார்.

ஈரானில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட அமெரிக்கா வைச் சேர்ந்த ஆட்சிக்கு எதி ரான குழுவின் தலைவர் கைது செய்யப்பட்டதாக தெஹ்ரான் அறிவித்தது.

அதன்படி டோண்டார் பய ங்கரவாத அமைப்பின் தலை வரான ஜம்ஷித் ஷர்மத் ஈரா னிய பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக ஈரானிய புலனாய்வு அமை ச்சகம் ஒரு அறிக்கையில் தெரி வித்துள்ளது.

பயங்கரவாத குழு" தெற்கு நகரமான ஷிராஸில் 2008 இல் நடந்த ஒரு பயங்கர குண் டுவெடிப்பு மற்றும் பிற கொடூ ரமான தாக்குதல்களுக்குப் பின் னால் இருந்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

அமெரிக்க மாநிலமான கலி போர்னியாவில் வசிக்கும் ஷர் மத், ஈரான் எதிர்ப்பு ஊடகப் பாதுகாப்புக்கு பொறுப்பானவர் என்று கூறப்படுகிறது. (4)

பாரம் தூக்கி சரிந்து விழுந்ததில் 11 பேர் பலி

(டில்லி)

இந்தியாவின் ஆந்திர மாநி லத்தின் விசாகப்பட்டினத்தில் உள்ள இந்துஸ்தான் துறைமு கத்தில் பாரம் தூக்கி சரிந்து விழுந்ததில் 11 பேர் உயிரிழந் துள்ளனர்.

புதிதாகக் கொள்வனவு செய் யப்பட்ட பாரம் தூக்கியைப் பரி சோதனை செய்த போது சரி ந்துவிழுந்துள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. காயமடை ந்தவர்கள், வைத் தியசாலை க்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளதுடன் இந்துஸ்தான் துறை முகத்தில் இடம்பெற்ற முதலா வது விபத்து இதுவெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

காந்தி நினைவு நாணயம் வெளியிட இங்கிலாந்து திட்டம்

(லண்டன்)

மகாத்மா காந்தியை நினைவு கூரும் வகையில் நாணயம் ஒன்றை வெளியிட இங்கிலா ந்து அரசு பரிசீலித்து வருவதா கத் தகவல் வெளிவந்துள்ளன.

உலகில் பல நாடுகள் காந் தியின் போதனைகளை தினந் தோறும் கற்று வருகிறார்கள். காந்தியை முன்னுதாரணமாக ஏற்றுப் பல நாட்டில் தலைவர் கள் வாழ்ந்து வருகிறார்கள். பல நாட்டில் ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பு குறியீடாக மகாத்மா காந்தி திகழ்ந்து வருகிறார்.

இரத்தம் சிந்தாமல் போரா ட்டம் நடத்தி, மக்களின் ஒற்று மையின் மூலமும் அமைதி யான போராட்டங்கள் மூலமும் ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப் படுத்த முடியும் என்ற வித்தை

யைக் கற்றுக் கொடுத்தவர் காந்தி.

இந்நிலையில் மகாத்மா காந்தியை நினைவு கூரும் வகையில் நாணயம் ஒன்றை வெளியிட இங்கிலாந்து அரசு பரிசீலித்து வருவதாக தகவல் தெரிவிக்கின்றது.

இது குறித்து இங்கிலாந்தின் நிதி அமைச்சர் ரிஷிசுனிக் கூறியதாவது,

இந்திய சுதந்திரத்திற்காக போராடிய மகாத்மா காந்தியை நினைவு கூரும் வகையில் நாணயம் ஒன்றை வெளியிட ராயல் மின்ட் அட்வைஸரி கமிட்டி ஆலோசித்து வருகிறது. மேலும் காந்தி கறுப்பு மற்றும் ஆசிய பிற சிறுபான்மை இன மக்களை அங்கீகரிப்பதற்காக பாடுபட்டார் என்பதை ஆலோ சனைக் குழுவிடம் தெரிவித்து ள்ளதாகக் கூறினார்.

மேலும் ராயல் மின்ட் அட் வைஸரி கமிட்டி வெளியிட்டு ள்ள மின்னஞ்சலில் காந்தியை நினைவுகூரும் வகையில் நாணயத்தை வெளியிட தற் போது முடிவு பரிசீலித்து வருவ தாகக் கூறப்பட்டுள்ளது. (4)

கொரோனா

(மொஸ்கோ)

உலக நாடுகளின் இக்கட்ட எதிர்பார்க்கப்பட்டுவரும் கொ னையை வெற்றிகரமாக நி

ரஷ்யாவின் கமலேயா நிறுவனம் உருவாக்கிய தடுப்பூசியின் பரிசோதனை கள் நிறைவடைந்துள்ள நிலையில் இதனை ஒக்டோபரில் மனிதர்களுக்கு செலுத்த உள்ளதாக ரஷ்யா அறிவித்துள் ளது.

உலகின் வல்லரசு நாடுகள் பலவும் இதற்கான முயற்சியில் ஈடுபட்டு வரும் நிலையில் ரஷ்யாவின் இவ் அறிவிப்பு ஏனைய நாடுகளுக்கு வியப்பை ஏற்படுத்

இந்திய செய்தி ச விதிக்கப்பட்டிருந்த

(காத்மண்டு)

நேபாள நாட்டின் கேபிள் டி.வி. உரி மையாளர்கள் நேபாளத்தின் உணர்வை புண்படுத்தும் அறிக்கைகளை ஒளிபரப் பியதாக குற்றம்சாட்டியதோடு மத்திய அரசின் சனலான தூர்தர்ஷனை தவிர் த்து ஏனைய அனைத்து இந்திய செய்தி சனல்களை ஒளிபரப்புவதை தடைசெய் தது.

பிரேசில் ஜனாதிபதியின் மனைவிக்

(பிரேசிலியா)

பிரேசில் ஜனாதிபதி போல் சனோராவின் மனைவியும் அமைச்சர் ஒருவரும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள னர் என்பது உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

கொரோனா வைரஸைக் குறைத்து மதிப்பிட்டு குறைந்த பட்ச நடவடிக்கை எடுத்த சில ஆட்சியாளர்களில் போல்சோராவும் ஒருவர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைப் போலவே அவர் முகமூடி அணிய மறுத்து வைரஸைக் கட்டுப்படுத்த நாட்டின் நடவடிக்கைகளைப் புறக்கணித்தார்.

அவர் அண்மைக் காலங்களில் நாட்டு

ஆப்கானிஸ்தானில் வெள்ள இதுவரை 16 பேர் உ

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் வெள் ளத்தில் சிக்கி இதுவரை 16 பேர் பலியானதாக தகவல் வெளிவந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் கிழ க்கு பகுதியில் உள்ள நங்கா ர்ஹார் மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடை விடாது கனமழை கொட்டி வருகிறது. இதனால் அங்கு உள்ள பல்வேறு மாவட்ட ங்களில் முக்கிய நீர் நிலை களில் வெள்ளப்பெருக்கு ஏற்ப ட்டுள்ளது.

ஏராளமான வீடுகள் வெள் ளத்தில் அடித்துச் செல்லப்பட் டன. மேலும் நூற்றுக்கணக் கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மழை வெள்ளம் காரண



மாக அனைத்து வகையான பொது போக் குவரத்தும் முடங்கியுள்ளது. மின்சாரம், தகவல்தொடர்பு ஆகியவையும் துண்டிக் கப்பட்டுள்ளன.

இதனால் மக்களின் இயல்பு வாழ் க்கை பெரிதும் முடங்கியுள்ளது. இவ்வெள்

வெளிநாடு

ானா பரிசோதனை வெற்றிகரமாக நிறைவு

இக்கட்டான சூழ்நிலைக்கு ஒரே தீர்வாக அனைவராலும் ரும் கொரோனா தொற்றுக்கான தடுப்பூசி பரிசோத மாக நிறைவு செய்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

அறிவித்தது ரஷ்யா

வனம் தனை லயில் களுக்கு வித்துள் பலவும் வரும் றிவிப்பு ஏற்படுத் தியுள்ளது.

இவ் அறிவிப்பை ரஷ்ய நாட்டின் சுகாதார அமைச்சர் மிக்கேல் முராஷ்கோ வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "கமலேயா நிறுவனம் உருவாக்கியுள்ள தடுப்பூசியை மனிதர்களுக்கு செலுத்தி பார்க்கும் பரிசோதனைகள் நிறைவடைந்து விட்டன. அடுத்து பதிவு செய்வதற்கான ஆவண வேலைகள் நடந்து வருகின்றன" என்று தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "ஒக்டோபர் மாதம் தடுப்பூசிகளை பொதுமக்களுக்கு செலுத்த திட்டமிட்டிருக்கிறோம். கொரோனாவுக்கு புதிய சிகிச்சை முறையை படிப்படியாக தொடங்க வேண்டும் என்பதால் தடுப்பூசியை ஒக்டோபரில் போட திட்டமிடுகிறோம்" எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, உலகளாவிய ரீதியில் கொரோனாத் தொற்று பாதிப்பில் நான்காவது இடத்தில் உள்ள ரஷ்யாவில் நேற்று முன்தினம் 5,482 பேருக்குப் புதிதாகத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,058 ஆக பதிவாகியுள்ளதுடன் கொரோனாத் தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 8 இலட்சத்து 45 ஆயிரத்தைக் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

்தி சனல்களுக்கு ருந்த தடை நீக்கம்

வி. உரி ணர்வை ஒளிபரப் மத்திய ன தவிர் செய்தி டைசெய்

இதனை நேபாளத்தின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வரவேற்று நன்றி தெரிவித்தது.

இந்நிலையில் ஜீ நியூஸ், இந்தியா டி.வி., ஏபிபி நியூஸ், உட்பட அனைத்து சனல்கள் மீதான தடை நீக்கப்பட்டு ஒளிபரப்பு செய்யப்படுவதாக நேபாள டீஸ் ஹோம் நிர்வாக இயக்குநர் தெரிவித்தார். (4)

விக்டோரியாவில் ஊரடங்கு மற்றும் தேசிய பேரழிவு நிலை அறிவிப்பு

(விக்டோரியா)

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான அதன் கடுமையான கட்டுப்பாடுகளின் ஒரு பகுதியாக அவுஸ்திரேலியாவின் விக்டோரியாவில் பேரழிவு நிலை அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இரவு ஊரடங்கும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

செப்டெம்பர் நடுப்பகுதி வரை ஆறு வாரங்களுக்கு இந்த புதிய கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படும் என அம்மாநில முதல்வர் டேனியல் அண்ட்ரூஸ் அறிவித்துள்ளார்.

மேலும் ஒரு வீட்டிற்கு ஒருவர் மட்டுமே ஒரு நாளைக்கு ஒருமுறை பொருட்களை கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

மெல்பேர்னில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 650 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதுவரை அவுஸ்திரேலியாவில் 17 ஆயிரத்து 300 இற்கும் அதிகமான கொரோனா வைரஸ் நோயாளிகள் மற்றும் 200 இறப்புகளும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

விக்கும் கொரோனா

த பட்ச ார்களில் னால்ட் அணிய நாட்டின் ார். ல் நாட்டு

மக்களிடமிருந்து கடும் எதிர்ப்பை எதிர்கொண்டார். இதனால் முன்னாள் சுகாதார அமைச்சரும் பதவி விலகியுள்ளார். அமெரிக்காவிற்குப் பிறகு கொரோனா வைரஸால் பிரேசில் மிக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஐந்து அமைச்சர்கள் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

ஆற்றில் அனுப்பப்பட்ட 15 கோடி ரூபாய் ஹெரோயின்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு ஆற்றில் அனுப்பப்பட்ட 15 கோடி ரூபாய் போதைப் பொருளைப் பஞ்சாபில் எல்லைப் பாதுகாப்புப் படை கைப்பற்றியது.

பாகிஸ்தானில் இருந்து பயங்கரவாதிகள் ஒருபுறம் இந்தியாவுக்குள் ஊடுருவி வரும் நிலையில் மறுபுறம் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்களும் அங்கிருந்து இந்தியாவுக்குள் கடத்தி வரப்படுகின்றன. பஞ்சாப் எல்லை வழியாக அடிக்கடி இத்தகைய போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் பஞ்சாப்பில் பாகிஸ்தான் எல்லைப்பகுதி வழியாக பாயும் ராவி ஆற்றில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் படகுகளில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகத்துக்கிடமான முறையில் பார்சல் ஒன்று ஆற்று நீரில் மிதந்து வந்தது.

படையினர் அந்தப் பார்சலைச் சோதனைக்கு உட்படுத்தினர். அதில் 2 பிளாஸ்டிக் போத்தல்கள் இருந்தன. அவற்றில் 2.980 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் காணப்பட்டது. சர்வதேச சந்தையில் இதன் மதிப்பு அண்ணளவாக 15 கோடி ரூபாய் ஆகும்.

பாகிஸ்தானைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள், இந்தியாவில் உள்ள தங்கள் சகாக்களுக்கு இதை ஆற்று வழியாக அனுப்பியிருக்கலாம் என அதிகாரிகள் கூறியுள்ளனர். இது குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (4)

வள்ளத்தில் சிக்கி ர் உயிரிழப்பு

து போக் ச்சாரம் . துண்டிக் பு வாழ் வ்வெள்

ளத்தில் சிக்கி இதுவரை 16 பேர் பலியாகியுள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்கள் எனவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (4)

பிரேசிலை புரட்டி எடுக்கும் கொரோனா இதுவரை 93 ஆயிரம் பேர் உயிரிழப்பு

(பிரேசிலியா)

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக பிரேசிலில் இதுவரை 93 ஆயிரம் பேர் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர்.

சீனாவில் ஹ்பேய் மாகாணம் வுகான் நகரில் கடந்த ஆண்டுடிசம்பர்மாதம்கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 213 நாடுகளுக்குள் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரஸ்க்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 87 ஆயிரத்தை கடந்துள்ளதுடன் ஒரு கோடியே 79 இலட்சத்துக்கு அதிகமானோருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸ் பரவியவர்களில் 59 இலட்சத்து 93 ஆயிரத்து 566 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 65 ஆயிரத்து 686 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனாவில் இருந்து ஒரு கோடியே 10 இலட்சத்துக்கும் அதிகமானோர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்துள்ளனர்.

குறிப்பாக அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக பிரேசிலில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 93 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்க்க வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு

ஜனாதிபதி உறுதிமொழி

(கொழும்பு)

நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதி மொழி அளித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பாகங்களுக்கும் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியிடம் மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே ஜனாதிபதி மேற்கண்டவாறு உறுதி மொழி அளித்துள்ளார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் ஜனாதிபதி தான் கலந்துரையாடி உள்ளதாகவும் இதற்கமைய நாட்டில் குடிநீர் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஜ-4)

தொடரும் துறைமுக தொழிற்சங்கங்களின் போராட்டம்

(கொழும்பு)

துறைமுகத் தொழிற் சங்கங்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை 5 ஆவது நாளாக நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுத்துள்ளன.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை, இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபைக்குரியது என எழுத்துமூலமான வாக்குறுதி வழங்குமாறு கோரியே அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மேலும் தங்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைத் தொடரவுள்ளதாகத் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த போராட்டம் காரணமாக துறைமுகத்தின் சகல நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் போராட்டத்தில் 23 துறைமுகத் தொழிற் சங்கங்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

பாராளுமன்றில் பெண்கள்; இலங்கைக்கு பின்னடைவு

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் பாராளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவ அடிப்படையிலான தரப்படுத்தலில் 193 நாடுகளில் இலங்கை 182 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கை பாராளுமன்றத்தில் நூற்றுக்கு 5 சதவீத பிரதிநிதித்துவமே காணப்படுகிறது.

இந்நிலையில் 2020 ஆம்ஆண்டுக்கான பொதுத் தேர்தலில் பிரதான கட்சிகள் சார்பில் தேர்தலில் போட்டியிட களமிறக்கப்பட்டுள்ள பெண் வேட்பாளர்களது விபரங்களை பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான Manthri.lk வெளியிட்டுள்ளது.

அதற்கமைய பொது ஜன பெரமுன சார்பில் போட்டியிடுகின்ற 252 வேட்பாளர்களில் 14 பெண் வேட்பாளர்கள் காணப்படுகின்றனர்.

அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிடுகின்ற 262 வேட்பாளர்களில் 15 பேர் பெண் வேட்பாளர்களாவர்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் 262 வேட்பாளர்களில் 10 பேர் பெண் வேட்பாளர்களாவர். தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடுகின்ற 262 வேட்பாளர்களில் 16 பேர் பெண் வேட்பாளர்களாவர்.

இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடுகின்ற 44 வேட்பாளர்களில் 4 பேர் பெண் வேட்பாளர்களாவர்.

தேசிய மக்கள் சக்தி மாத்திரமே ஏனைய கட்சிகளுடன் ஒப்பிடும் போது அதிகளவான பெண் வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளது. (ஜ-4)

ஹெரோயினுடன் சிக்கிய பூனை

(கொழும்பு)

கொழும்பு. மகசின் சிறைச்சாலைக்கு அருகே சிறை அதிகாரிகளினால் பூனையொன்று பிடிக்கப்பட்டுள்ளது.

பூனையின் கழுத்தில் 1.7 கிராம் ஹெரோயின், இரண்டு சிம் அட்டைகள் மற்றும் நினைவக அட்டை (memory card) கட்டப்பட்டிருந்த நிலையிலேயே இந்த பூனை சிறைச்சாலை அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய குறித்த பூனை பிடிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

நல்லதும் கெட்டதும்

ஒரு பெரியவர். வேகமாகப் போய்க்கொண்டு இருந்தார். அடிக்கடி கையைத் திருப்பி கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தார். ஏனென்றால் இன்னும் ஒரு அரை மணி நேரத்திலே அவர் ஒரு கூட்டத்திலே பேச வேண்டியிருக்கின்றது. தலைப்பு என்ன தெரியுமா?அன்பின் பெருமை இது தான் தலைப்பு.

என்னென்ன பேச வேண்டும் என்கின்றதைப் பற்றி தீவிரமாக யோசித்துக் கொண்டே நடந்து போய்க்கொண்டிருந்தார். ஒரு வயல் வெளியைக் கடந்து போய்க் கொண்டிருந்த போது வழியில் வாய்க்காலிலே ஒருத்தன் அடிபட்டுக் கிடந்ததைப் பார்த்தார். ஐயோ பாவம் யாரோ ஒருத்தன் அடிபட்டுக் கிடக்கின்றான், அவனைத் தூக்கி அவனுக்கு உதவி செய்யலாம் என்று நினைத்தார்.

ஆனால் அதற்குள்ளே இன்னொரு நினைவு வந்து விட்டது. இவனுக்கு இங்கே உதவி செய்ய ஆரம்பித்தால்... அங்கே நாங்கள் நேரத்திற்குப் போய்ச் சேர முடியாது.

அந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டு விடும். அங்கே மண்டபத்திலே நம்முடைய பிரசங்கத்தைக் கேட்க நிறையப்பேர் காத்துக்கொண்டிருப்பார்களே என்று நினைத்தார். அன்பே கடவுள் என்று சொல்லி ஆரம்பித்து அதைப்பற்றி நிறைய பேசவேண்டும் என்கின்றது அவருடைய ஆசை. அதனால் அடிபட்டுக் கிடந்தவனைத் தூக்க நினைத்தவர் அது வேண்டாம் என்று முடிவு செய்து நிமிர்ந்தார்.

அப்போது அடிபட்டுக்கிடந்த ஆள் பேசினான். "ஐயா, நீங்கள் யார்? நீங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கின்றீர்கள்" என்கின்றதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் அன்பின் பெருமையைப் பற்றி பிரசங்கம் செய்யப்போகின்றீர்கள் நானும் அங்கே தான் வந்து கொண்டிருக்கின்றேன்.

வழியிலே சில பேர் என்னை அடித்து விட்டுப் போட்டார்கள். என்னை நீங்கள் காப்பாற்றுங்கள் இல்லை என்றால் மக்களிடம் போய் பேசுவேன். "வாய்க்காலிலே ஒருத்தன் அடிபட்டுக் கிடக்கின்றான் அவனைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக அன்பின் பெருமை பற்றி பிரசங்கம் செய்யப் போனார் இந்தப் பெரியவர் என்றார் என்று எல்லோரிடமும் கூறுவேன்" என்றார்.

இதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் பயந்துவிட்டார். மக்கள் என்னுடைய பேச்சை வெறும் போலித்தனம் என்று நினைத்து விடுவார்களே என்று நினைத்தார். அதாவது அந்தப் பெரியவருக்கு, செத்துக்கொண்டு இருக்கின்ற இந்த மனிதனைப் பற்றி கவலை இல்லை. அவருடைய கவலை எல்லாம் பொது மக்கள் எங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றித்தான். சரி என்று வேண்டா வெறுப்பாக அந்த மனிதரிடம் போனார்.

குனிந்தார், பார்த்தார் அந்த முகம் ஏற்கனவே தனக்குப் பழக்கப்பட்ட முகம் மாதிரி தெரிந்தது. "உன்னை இதற்கு முதல் எங்கேயோ பார்த்த மாதிரி ஞாபகம்" என்றார். நிச்சயமாக நீங்கள் பார்த்து இருக்கலாம். ஏனென்றால் நான் தான் சாத்தான். உங்களைப் போல ஆட்களிடம் தான் எனக்கு நெருக்கம் அதிகம்.

அப்படி இருக்கின்ற போது உங்களுக்கு நான் தெரியவில்லை என்றால் வேறு யார் தான்உங்களுக்குத் தெரிவார்கள்? என்றார். இப்போது தான் அந்த ஆளினுடைய முகம் பெரியவருக்கு ஞாபகத்திற்கு வந்தது. அடிக்கடி பார்த்திருக்கின்றார். இதோ பார் இப்போது உன்னை காப்பாற்ற முடியாது. நீ சாத்தான், நீ செத்துப்போக வேண்டும் என்று தான் நாங்கள் எல்லாம் ஆசைப்படுகின்றோம். உன்னைத் தொட்டாலே பாவம்என்று சொல்லி விட்டு நடக்க ஆரம்பித்தார். சாத்தான் இப்பொழுது பலமாகச் சிரிக்க ஆரம்பித்தான்.

"இதோ பாருங்கள் நான் எப்போது சாகின்றேனோ அன்றையிலிருந்தே உங்கள் வியாபாரமும் செத்துவிடும். உங்களுடைய தொழில் நடப்பதே என்னால் தான். நான் இல்லை என்றால் இந்த உலகத்திலே அன்பின் பெருமையைப் பற்றி எடுத்துப் பேச வேண்டிய அவசியமே இருக்காது. பிறகு உங்களுக்கு எல்லாம் வேலை இருக்காது. எல்லோரும் அன்பாக இருந்து விட்டார்கள் என்றால் பிறகு உங்களுக்கு இங்கே என்ன வேலை? என்றது சாத்தான்.

பெரியவர் யோசிக்க ஆரம்பித்தார். அதிலே உள்ள உண்மையைப் புரிந்து கொண்டார். உடனே செத்துக்கொண்டிருந்த அந்த மனிதனைக் குனிந்து தோளிலே தூக்கிக்கொண்டிருந்தார்.வேகமாக வைத்தியசாலைக்கு ஓடினார். அப்படிப் போய்க் கொண்டிருக்கின்ற போதே தோளிலே கிடந்த சாத்தானிடம் சொன்னார்.

"இதோ பார் தயவு செய்து நீ பிழைத்துக்கொள். செத்துப்போய் விடாதே, நீ சொன்னது சரி தான் நீ இல்லை என்றால் எங்களுக்கு இங்கே வேலை இல்லாமல் போய்விடும்" என்றார். இது தான் சேர் உலகம். கெட்டது என்று ஒன்று இருக்கின்றதனாலே தான் நல்லது என்ற ஒன்றும் இருக்க முடிகின்றது. இன்னொரு இடத்திலே, ஒரு பெரியவர் ஒரு சாத்தானை பிடித்து இழுத்துக்கொண்டு போனார். கிணற்றிலே தள்ளுவதற்கு சாத்தான். அந்த கிணத்தை குனிந்து பார்த்து விட்டு "அடடே அதே கிணறு தானே?" என்று சொல்லி விட்டுச் சிரித்தது. ஏன் சிரிக்கின்றாய்? என்று கேட்டார் பெரியவர். ஒன்றுமில்லை இதே கிணற்றிலே தான் நான் ஒருத்தனைப் பிடித்துத் தள்ளினேன். 50 வருடத்திற்கு முதல். அதற்குப்பிறகு தான் சாத்தானாக மாறினேன் என்று கூறியது. பெரியவர் தலை தெறிக்க அங்கே இருந்து ஓடினார்.

வறுமையை ஒழிக்க ஆரம்பித்த பயணத்தை நிறுத்தமாட்டேன்

ஜனாதிபதி திட்டவட்டம்

(கொழும்பு)

நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கு ஆரம்பித்த பயணத்தை எத்தகைய தடைகள் வந்தாலும் நிறுத்தமாட்டேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டை அபிவிருத்திப் பாதையை நோக்கிக் கொண்டு செல்லும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

"சுபீட்சத்தினை நோக்கி கொள்கைப் பிரகடனத்தில் மக் களுக்கு வழங்கிய வாக்குறுதி கள் நிறைவேற்றப்படும்.

மேலும், பெரும்பாலானோ ருக்கு தொழில் கிடைத்தாலும் ஏழை மக்களுக்குச் சந்தர்ப்பம் கிடைப்பது மிகவும் குறைவா கவே இருக்கின்றது. எனவே அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றமடைய செய்ய சிற ந்த வேலைத் திட்டங் களை

முன்னெடுப்பேன்.

நாட்டைப் பற்றியும் மக்க ளைப் பற்றியும் சிந்திக்கும் தலைவர் அதிகாரத்திற்கு வரும் போது. அவரினால் முன்னெடுக் கும் வேலைத்திட்டங்களைக் குழப்புவதற்குச் சிலர் முயற்சிக் கின்றனர்.

எனினும், எந்தத் தடைகள் வந்தாலும் அவைகளை முறிய டித்து வறுமையை நிச்சயம் ஒழிப்பேன்" என அவர் தெரிவி த்தார். (ஜ-4)

கடற்படைத்தளபதியை சந்தித்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இலங்கைக்கான அவுஸ்தி ரேலியா உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலி நேற்று முன்தினம் கடற்படைத் தலைமையகத்தில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதெ ன்னவை சந்தித்தார்.

இலங்கைக் கடற்படையின் 24 ஆவது தளபதியாக நியமிக் கப்பட்ட வைஸ் அட்மிரல் நிஷா ந்த உலுகேதென்னவுக்கு அவு ஸ்திரேலியா உயர் ஸ்தானிகர் டேவிட் ஹோலி தனது வாழ்த் துக்களைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, அவுஸ்திரேலியா உயர் ஸ்தா னிகரும் கடற்படைத் தளபதியும் பரஸ்பர நலன்களைப் பற்றிய கருத்துகளைப் பரிமாறிக் கொண் டனர்.

இதற்கிடையில், இலங்கை கடற்படையின் 24 ஆவது தள பதியாக நியமிக்கப்பட்டமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த ராயல் அவுஸ்திரேலியா கடற் படைத்தளபதியின் மற்றும் அவுஸ்திரேலியா அரசாங்கத் தின் இறையாண்மை எல்லை செய்ற்பாடுகள் குறித்த ஒருங் கிணைந்த பணிக்குழுவின் கட்டளை அதிகாரியின் வாழ்த் துச் செய்திகளை இங்கு உயர் ஸ்தானிகர் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவுக்கு வழங்கி னார்.

இந்நிகழ்வில் கொழும்பு அவுஸ்திரேலியா உயர்ஸ்தா னிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் குரூப் கப்டன் சோன் அன்வினும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் கடற்படைத் தளபதி மற்றும் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் டேவிட் ஹோலி ஆகியோருக்கு இடையே நினை வுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (ஜ-4)

செய்மதியை வடிவமைக்க உதவிய இலங்கைப்பெண்

(வோஷிங்டன்)

செவ்வாய் கிரகத்தில் உயிர் வாழ முடியுமா என ஆராய்வத ற்காக ரோவர் என்ற விண் கலம் ஒன்றை நாஸா விண் ணில் செலுத்தியுள்ளது.

ஒரு தொன் நிறையுடைய ரோவர் விண்கலம் கடந்த 31 ஆம் திகதி விண்ணில் செலுத் தப்பட்டது.

இந்த ஆய்வு உபகரண த்தை நிர்மாணிப்பதற்காக இலங்கைப் பெண் பொறியிய லாளர் ஒருவர் உதவியுள்ளார்.

விமானம் தயாரிக்கும் பொறி யியல் துறையில் தனது தொழி லைத் தெரிவு செய்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு நாஸா நிறுவனத்துடன் இணைந்துள் ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

மாக்ஸ் ரோவர் இயந்திரத்தின் மின்சுற்றின் இயந்திர வடிவ மைப்பை தயாரிப்பதற்கு முழு மையான உதவிகளை அவர் மேற்கொண்டுள்ளதாக ஊடக ங்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)

வேண்டும் வரந்தரும் வேலா

நானிலம் செழிக்க நன்னெறிதழைக்க
நல்லைநகர் வீற்றிருக்கும்
நாயகனே வேலா கந்தா
நாமுனைப் பணிந்தோம் அருள்வாய்

வேண்டியடியார் வந்து
வேலாயென்றுனை வணங்க
வேண்டும் வரம் தந்து
வேட்கை தீர்ப்பாய் முருகா

வெஞ்சமரில் சூரனையழித்த பாலா
வேலமுகத்தோன் தம்பியே நீ
சேவற்கொடியுடை சேந்தனே
சேர்ந்தார் துன்பம் நீக்கும் பாலகனே

நானொன்று உனக்குரைப்பேனய்யா
நாட்டிலே கொடுமையிங்கே
நாளுக்கு நாள் பெருகுதய்யா
நல்லோர் தினம் வலியோர்கையில்
வாடும் நிலை வளருதய்யா

மனம் வெந்து நாமிங்கு கலக்க - உனக்கு
மனமில்லையோ நீவந்து காக்க
நம்பியே உன்மலர்ப்பாதம் பணிந்தோம்
நல்லதுணை நீயே நல்லூர் நாயகனே

சி. நிலா.

குலவி வர வேணும் ஐயா நல்லைப் பதி அமரும் அலங்காரக் கந்தனே

நல்லைப் பதி அமர்ந்து அருள் பாலிக்கும்
நல்லைக் குமரனே
கஜாவல்லி மகாவல்லி மனம் நிறைந்த நாயகனே
தந்தைக்குபதேசஞ் செய்த சிவகுரு நாதனே
தெரி தமிழை உதவு சங்கப் புலவோனே
தமிழினத்தின் துயர்களையும் விறலோனே
நின் அருட்பிரசாதம் வேண்டி அல்லலுறும்
மெய் அடியார்கள் துயர் களையவும்
கொடிய கொரோனாவிலிருந்து பாதுகாக்கவும்
கோலமா மஞ்ஞை ஊர்ந்து குலவிவர வேணும் ஐயா
நல்லைப் பதி அமரும் அலங்காரக் கந்தனே

சரவணமுத்து பரஞ்சோதி
-பொலிகையூர்.

சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

கற்ற வற்கும் மற்ற வற்கும்
காட்டும் பேத மற்றவன்
பெற்ற வற்கும் அற்ற வற்கும்
பிறிவு இன்றி யுற்றவன்
நற்ற வற்குஞ் செற்ற வற்கும்
நடுவில் நிற்கும் கொற்றவன்
கற்ப கத்தைப் பொற்ப தத்தில்
காட்டும் நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

கலாநிதி முருகர் குணசிங்கம்

33

அவுஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் காணப்பட்ட போதிலும் பல்வேறுபட்ட முன்னேற்றகரமான சூழ்நிலைகளும் வாய்ப்புகளும் அவர்களுக்கு அங்கு கிடைந்தன.

மிகப்பரந்து விரிந்த நாடு. வெப்ப நிலை, ஜூன், ஜூலை மாதங்களில் சற்றுக் குளிர், அமைதியான அரசியல் சூழ்நிலை, பல இனத்தவர்களும் வாழும் பல்கலாசாரச் சூழல் **(Multicultural environment)** நல்ல தொழில், கல்வி வாய்ப்புக்கள், வசதியான வீடுகள், நல்ல சுகாதார மருத்துவ சமூக நல வசதிகள், சிறந்த போக்குவரத்து வசதிகள் எல்லா வகையான சுதந்திரம், பாதுகாப்பு, இன, மத, மொழி, பால், வயது, ஊனமுற்றோர் போன்றவற்றின் அடிப்படையில் பாராபட்சம் காட்டுவதற்கு எதிரான சட்டங்கள் **(Anti-discrimination Act)**, தொழில், வேலை வாய்ப்பு, பதவி உயர்வு, கல்வி போன்றவற்றில் சகலருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்கும் **(Equal Employment opportunity)** அரசின் கொள்கைகள், வேலையற்றவர்களுக்கும் முதியவர்களுக்கும் அரசு நன்கொடை, கல்வி பயிலும் மாணவர்களுக்கு நன்கொடை, தொழிலில் இருந்து ஓய்வு பெறுவோருக்கு ஓய்வு ஊதியத் திட்டம், வீடு அற்ற வர்களுக்கு மிகக் குறைந்த வாடகையில் வசதியான வீடு வழங்கும் அரசின் திட்டங்கள் என ஒரு மனித வாழ்வுக்குத் தேவையான சகலவற்றையும் நிறைவு செய்து அந்த மனிதனை நிம்மதியாக வாழ வைக்கக்கூடிய ஒரு சிறந்த சூழ்நிலை, ஈழத்தமிழருக்குக் கிடைத்த வரப்பிரசாதம் ஆகும்.

மேற்படி சகல வாய்ப்புகளும் வசதிகளும் அவுஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் ஈழத்தமிழருக்குக் கிடைத்த போதிலும் அவர்கள் ஒரு தனியான இனமாக அல்லது சமூகமாக வாழ்வதற்கும் தமது தனித்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் அடையாளத்தையும் பேணிப் பாதுகாப்பதற்கும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தது.

தமது தனித்துவத்தைக் கட்டிக்காக்கின்ற அதேவேளையில் ஒரு புதிய நாட்டில், புதிய சூழ்நிலையில் பல்கலாசாரம் நடைமுறையில் உள்ள நாட்டில் தாமும் அதனை உள்வாங்க வேண்டிய தேவையும் தவிர்க்க முடியாத ஒரு சவாலாக அவர்களுக்கு இருந்தது.

இத்தகைய பின்னணியில் இரு நாடுகளுக்கும் தொழிலுக்காகவும் அகதிகளாகவும் தமது புலம்பெயர் வாழ்க்கையைத் தொடங்கி, அங்கு நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களின் சமூக நிலைமைகளை மேற்கொண்டு சுருக்கமாக அணுகுவது பொருமத்தமானது ஆகும்.

இக்கட்டுரையாசிரியர் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருவதாலும், ஈழத் தமிழர்களுடனும் அவர்களின் பல்வேறு சமூக, சமய, மொழி, கல்வி, கலை, பண்பாடு, பொருளாதார, அரசியல் சார்ந்த அமைப்புகளுடனும் நெருக்கிய தொடர்புகளைப் பேணி வருபவர் என்பதாலும் அவுஸ்திரேலியத் தமிழர்கள் பற்றிய ஆய்வுகளைச் செய்தவர் என்ப தாலும் இந்த ஆய்வில் கூடுதலாகத் தனது சொந்த அனுபவங்களையும் தனது நேரடிப் பார்வைகளையும் உள்ளடக்கி இருக்கின்றார்.

அவுஸ்திரேலியாவுக்கு அருகாமையில் உள்ள நியூசிலாந்து நாட்டுக்கும் சென்று அங்குள்ள சமூக நிறுவனங்களுடன் தொடர்ச்சியான தொடர்புகளை மேற்கொண்டு வருவதால், அங்கு வாழும் தமிழ்ச் சமூக நிலைமை பற்றியும் அவுஸ்திரேலியத் தமிழ்ச் சமூக நிலைமை பற்றியும் அணுகுவது போல் அணுக முடிகின்றது.

இத்தகைய அனுபவங்கள், பார்வைகள் போன்றன, ஈழத்தமிழர் தொடர்பாக வெளிவந்த புலமைசார் கட்டுரைகள், ஆய்வு நூல்களில் உள்ள புள்ளி விபரங்களுடன் ஒப்பீட்டு அடிப்படையில் அலசி ஆராய்ந்து அவுஸ்திரேலியா, நியூசிலாந்து வாழ் புலம்பெயர் தமிழர்களின் சமூக நிலைமைகள் இங்கு சுருக்கமாக ஆய்வு செய்யப்படுகின்றன.

நியூசவுத் வேல்ஸ் மாநிலம்

அவுஸ்திரேலியா சென்ற ஈழத்தமிழர்கள் அங்குள்ள ஆறு மாநிலங்களிலும் இரு முக்கியமான மாகாணங்களிலும் தமது குடியமர்வுகளை ஏற்படுத்தி வாழ்ந்து வருகின்றார்கள்.

நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தில் பதினைந்து ஆயிரம் தமிழர்கள், விக்டோரியா மாநிலத்தில் பத்தாயிரம் தமிழர்கள், மேற்கு அவுஸ்திரேலியா மாநிலத்தில் சுமார் இரண்டாயிரம் தமிழர்கள், குயின்ஸ்லாந்து மாநிலத்தில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு தஸ்மானியா மாநிலத்தில் சுமார் நூற்று ஐம்பது தமிழர்கள், வடமாகாணத்தில் சுமார் இருநூறு தமிழர்கள், அவுஸ்திரேலிய தலைநகர் மாகாணத்தில் சுமார் ஆயிரம் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

நியூசவுத் வேல்ஸ் மாநிலத்திலும் விக்டோரியா மாநிலத்திலும்தான் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

அடுத்த படியாக மேற்கு அவுஸ்திரேலியா, குயின்ஸ்லாந்து மாநிலம், அவுஸ்திரேலியாவின் தலைநகர் மாகாணத்திலும் சிறுதொகையினர் வாழ்ந்து வருகின்றார்கள்.

ஏனைய மாநிலங்களிலும் மாகாணங்களிலும் மிகக்குறைவான தமிழர்களே வாழ்ந்து வருகின்றார்கள். இதற்கான காரணமாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

முதலாவதாக நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில், புலமைசார் தொழில் புரிபவர்களுக்கும் நடுத்தரத் தொழில் புரிபவர்களுக்கும் எழுது வினைஞர் தொழில் புரிபவர்களுக்கும் அரச மற்றும் தனியார் துறைகளில் நிறைவான வாய்ப்புகள் கிடைக்கின்றன.

எடுத்துக்காட்டாக மருத்துவர்கள், பொறியாளர்கள், கணக்காளர்கள், சட்ட வல்லுநர்கள் போன்றவர்களுக்கு அதிக வருமானம் பெறக்கூடிய தொழில்களை பெறக்கூடிய வாய்ப்புக்கள் நிறைய உண்டு.

வரி இலாகா, குடிவரவு இலாகா, சமூக இலாகா **(social Security)** வங்கிகள் போன்ற அரச நிறுவனங்களில் சாதாரண தொழில் பெறக்கூடிய வாய்ப்புக்களும் நிறைய உண்டு.

இதேபோல், அவுஸ்திரேலியத் தலைநகர் மாகாணத்தையும் எடுத்துக்கொள்ளலாம். ஆங்கிலம் கற்ற மேல் தட்டு மாகாணத்தையும் எடுத்துக் கொள்ளலாம்.

ஆங்கிலம் கற்ற மேல் தட்டு, நடுத்தரப் பிரிவினர் நல்ல தொழில் வாய்ப்புகளைப் பெற்று உள்ளனர்.

ஆனால் விக்டோரியா மாநிலத்தில் வாழும் ஈழத்தமிழர்களுள் மிகக்குறைந்த அளவு தொகையினரே புலமைசார், தொழில் துறைகளில் இருப்பதையும் பொரும்பான்மையினர் தொழிற்கூடங்களிலும் நிறுவனங்களிலும், சாதாரணத் தொழில் புரிபவர்களாக இருப்பதையும் காண முடிகிறது.

இவர்களுள் பெரும்பான்மையினர் ஆங்கில அறிவு குறைந்த கீழ்த்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவும் அகதிகள் என்றும் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

எஞ்சியுள்ள மாநிலங்களில் வாழும் தமிழர்களையும் இதே வரையறைக்குள் உட்பட்டவர்களாகக் காண முடிகின்றது.

சமூக பின்னணியின் விளைவாக மேல்தட்டு வர்க்கம் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் செல்வம் படைந்த ஈழத்தமிழர்கள், அநேகமாக தமிழ்ச் சமுதாயத்தில் இருந்து ஒதுங்கி தாமும் தமது குடும்பமுமாக வாழ்கின்றார்கள்.

அவர்கள் தமிழ்ச் சமுதாயம் பற்றியும் தமது நாடு பற்றியும் அந்த மக்கள் பற்றியும் அக்கறை இல்லாதவர்களாக வாழ்கின்றார்கள் என்பதே கசப்பான உண்மை ஆகும்.

ஆனால் அவர்களுள் பெரும்பான்மையானோர் அகதிகளாகவே அவுஸ்திரேலியா நாட்டுக்குள் வந்து அகதி அந்தஸ்துக்கோரி நிரந்தரமாக வாழ்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு நடுத்தர கீழ்மட்ட வர்க்கத்தினரிடம் சாதி வேறுபாடுகள் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற வேறுபாடுகள், பிரதேச வேறுபாடுகள் போன்ற வெளிப்படையான மறைமுகமான பிரிவினைகள் இருந்தபோதிலும் அவர்களே கூடுதலாக ஒரு தமிழ்ச் சமூகமாக ஒன்றுகூடி சமய, மொழி, கல்வி, பண்பாடு, அரசியல் சார்ந்த துறைகளில், தமது தனித்துவத்தையும் அடையாளத்தையும் பேணுவதன் பொருட்டுப் பல சவால்களைச் சந்தித்துப் பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றார்கள்.

அத்தோடு தம் தேசம் பற்றியும் தமது மக்கள் பற்றியும் அவர்களின் தேவைகள் பற்றியும் அக்கறை கொண்டவர்களாக அவர்களுக்குத் தேவையான உதவிகளைத் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றார்கள். மேலும் தமது தேச விடுதலை பற்றிய அக்கறையையும் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றார்கள்.

அவுஸ்திரேலியாவில் வாழும் ஈழத் தமிழர்களின் சமூக நிலைமைகள் நியூசிலாந்தில் வாழும் ஈழத்தமிழர்களுக்கும் பெரும்பாலும் பொருந்துவனவாகவே காணப்படுகின்றன.

நியூசிலாந்தில் ஒக்லண்ட் **(Auckland)** நகரில்தான் சுமார் 90 விழுக்காடு ஈழத்தமிழர்கள் வாழ்கின்றார்கள். எஞ்சியவர்கள் தலைநகரான வெலிங்டனில் **(Wellington)** வாழ்கின்றார்கள் ஒக்லண்டில் அவர்களுக்குப் பெருமளவு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

அங்கே தொழிற்சாலைகளும் அதிகம் உள்ளன. எனவே ஈழத்தமிழர்களின் சகல மட்டத்தினரையும் ஒக்லண்ட் ஈர்த்து இருக்கின்ற நிலைமையைப் புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

வெலிங்டனில் கூடுதலாக தொழில் சார் வல்லுநர்கள், அர உதவி சார் துறைகளில் பெருமளவு துணியில் அழுக்குப் படாத தொழில்கள் செய்து வருகின்றார்கள் என்பதனை அறிய முடிகிறது.

இவ்விரு நாடுகளிலும் 90 விழுக்காட்டுக்கும் அதிகமானவர்கள் தமது சொந்த வீடுகளில் வசதியாக வாழ்வதனையே பார்க்க முடிகின்றது. 1980களில் வந்த ஈழத்தமிழர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட வீடுகளைச் சொந்தமாகவே வைத்திருக்கின்றார்கள். (தொடரும்)

இ.தொ.காவின் முன்னாள் பொதுச் செயலாளர் காலமானார்

(ஹற்றன்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளரும், முன்னாள் பிரதியமைச்சருமான எம்.எஸ். செல்லசாமி நேற்று முன்தினம் சனிக்கிழமை காலமானார்.

எம்.எஸ் செல்லசாமிமுதுமை காரணமாக இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

1926-12-11ஆம் திகதி தலவாக்கலை, மடகும்புர தோட்டத்தில் சுந்தரலிங்கம் அன்னப்பூரணிக்கு மகனாக பிறந்த அவர், ஹற்றன்-

சென்.பொஸ்கோ பாடசாலையில் தமது ஆரம்பக்கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தார்.

சமூக சேவைகளிலும், பொதுப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஊடாக அரசியலுக்குள் காலடி எடுத்து வைத்தார்.

42 வருடம் அரசியல் அனுபவம் பெற்ற இவர் 1988 ஆம் ஆண்டு மாவட்ட சபை ஊடாக அரசியலுக்கு பிரவேசித்தார்.

1990 மாகாண சபை,1991 நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்த இவர் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் பதவி, கைத்தொழில் விஞ்ஞான அமைச்சுப் பதவிகளை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

நிர்க்கதியான பிள்ளைகளை பொறுப்பேற்க அரசு திட்டம்

(கொழும்பு)

பெற்றோர்களால் கைவிடப்பட்ட மற்றும் நிர்க்கதியான நிலையில் காணப்படும் பிள்ளைகளை பொறுப்பேற்க திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதாக சிறுவர் கள் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

மாகாணத்திற்கு மாகாணம் இவ்வாறான சிறுவர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கான அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொடுக்கும் வகையில் நிறுவனம் ஒன்றை நிறுவ உள்ளதாகவும் சிறுவர்கள் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. (ஜ-8)

ஷானி அபேசேகர சிறை வைத்தியசாலையில்

(கொழும்பு)

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, மஹர சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு மற்றும் சுகயீனம் காரணமாகவே ஷானி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஷானி அபேசேகர அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலை விடுதியில், நீர்கொழும்பு சிறைச்



சாலையின் முன்னாள் சிறைச்சாலை அதிகாரி சரத் பண்டார மற்றும் பொலிஸார் இருவர் உள்ளிட்ட 22 பேர் தங்கியுள்ளதாகவும் சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)

துப்பாக்கிச் சூட்டில் பெண் உயிரிழப்பு சந்தேக நபருக்கு பொலிஸார் வலைவீச்சு

(கொழும்பு)

பெலியத்த- தம்முல்லை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 52 வயதான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் இடம் பெற்றமைக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஜ-4)

சில இடங்களில் 100 மி.மீ. மழைவீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் சப்ரகமுவ, மேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக் கூடும்.

சில இடங்களில் சுமார் 100 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில், வடமேல் மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மாகாணத்தில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

தென் மாகாணத்திலும் பொலநறுவை, மன்னார், திருகோணமலை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

பேருவளையிலிருந்து காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்தை அண்டிய பகுதிகளில் உயர் அலைகள் காரணமாக கடல் அலைகள் கரையை அண்டிய நிலப் பகுதிகளுக்கு வரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்கள் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

மூன்று வாக்காளர்களுக்காக ஒரு வாக்களிப்பு நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று வாக்காளர்களுக்காக ஒரு வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள மாந்தீவு தொழுநோய்யாளர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வாவியின் மத்தியில் அமைந்துள்ள மாந்தீவு எனும் தீவுத்திடல் பகுதியில் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் தொழுநோயாளர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்காக அங்கு ஒரு தொழுநோய் வைத்தியசாலை அமைக்கப்பட்டு அது தற்போது வரை இயங்கி வருகின்றது.

கூடவே அங்கு வேலை செய்யும் சுகாதாரத்துறை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் ஆகியோர் தங்கியிருக்கும் விடுதிகளும் வழிபாட்டுத் தலங்கள் உட்பட பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தற்போது அந்த வைத்தியசாலையில் மூன்று பேர் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு வாக்குரிமையும் உள்ளன.

இவர்களுக்கான வாக்குப் பெட்டி இயந்திரப்படகு மூலம் மாந்தீவு வாக்கெடுப்பு நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி கலாமதி தெரிவித்தார்.

மூன்று வாக்காளர்களுக்கும் பொதுவான நியமங்களே கடைப்பிடிக்கப்பட வுள்ளதாகவும் வழமையான வாக்களிப்பு நேரமாகிய 7 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை வாக்களிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஜ-4)

111 பேருக்கு எதிராக சர்வதேச சிவப்பு பிடியாணை

(கொழும்பு)

போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பல்வேறு குற்றங்களில் ஈடுபட்ட 111 குற்றவாளிகளை கைது செய்ய சர்வதேச சிவப்பு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேலும், 20 பேருக்கு எதிராக சர்வதேச சிவப்பு பிடியாணை உத்தரவை பெறுவதற்கான பணிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்த சில மாதங்களில், உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளில் பதுங்கியிருக்கும் சுமார் 100 குற்றவாளிகளுக்கு எதிராக சர்வதேச சிவப்பு பிடியாணை உத்தரவு பெறப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நேரடி மேற்பார்வையிலும், பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவின் அறிவுறுத்தலின் பேரிலும் இந்த உத்தரவை பெறுவதற்கான செயல்முறை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, உலகெங்கிலும் பதுங்கியிருக்கும் இலங்கை குற்றவாளிகள் குறித்த தகவல்களை பெற்றுக் கொள்ளும் வகையில் நீல அறிக்கைகளை பெறவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற 84 நீல அறிக்கைகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் டி.ஐ.ஜி நுவான் வெதசிங்க தெரிவித்துள்ளார். (ஜ-4)

உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும்

(கொழும்பு)

நாட்டில் உணவுப்பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் எமது கோரிக்கையை அரசாங்கம் ஏற்கவில்லை என்றால் இந்த நிலை ஏற்படும் என்றும் இலங்கை சுதந்திர சேவையாளர் சங்கத்தின் தலைவர் பிரசன்ன களுத்தரகே தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பனை செய்ய மாட்டோம் எனக் கடிதம் மூலம் உறுதி வழங்குவது அவசியம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறான நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படவில்லை என்றால் பணிப்பகிஷ்கரிப்பு தொடரும் என அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் நாட்களில் உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும் அதற்கான பொறுப்பை எங்கள் சங்கம் ஏற்றுக்கொள்ளாது.

இந்த விடயம் குறித்து துறைசார் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

எனினும் அவை தோல்வியில் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

கொரோனா தொற்றுக்குள்ளான எவரும் அடையாளம் காணப்படவில்லை

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் கொரோனாத் தொற்றுக்குள்ளான எவரும் அடையாளம் காணப்படவில்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனையடுத்து கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 815 ஆகவே காணப்படுகிறது.

அவர்களில் 2 ஆயிரத்து 391 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர். (ஜ-4)

ஹெரோயின் மோசடி; 4 பேர் கைதாகினர்

(கொழும்பு)

4 இலட்சத்து 69 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் உட்பட 390 மில்லியன் ரூபா அளவிலான ஹெரோயின் மோசடிகளில் ஈடுபட்ட பல நபர்களின் வங்கிக் கணக்கு விபரங்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த மோசடியில் ஈடுபட்ட நால்வரை மேல் மாகாண புலனாய்வுப் பிரிவினர் ராஜகிரிய, பத்தரமுல்ல மற்றும் பெல்வத்த பகுதிகளில் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

பன்னிபிட்டிய, புறக்கோட்டை மற்றும் பத்தரமுல்லை பகுதிகளைச் சேர்ந்த 32,38 மற்றும் 42 வயதுடைய நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு சந்தேக நபர்களும் கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்புட்ட நிலையில் அவர்களை ஏழு நாட்கள் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நீதவான் உத்தரவிட்டார். (ஜ-4)

நீரில் மூழ்கி மாணவர்கள் பலி

(கொழும்பு)

கிரிந்திவெல- ரன்வல பகுதியிலுள்ள நீரோடையில் நீராடச் சென்ற இரண்டு பாடசாலை மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்றைய தினம் நீரோடையில் நீராடச் சென்ற நிலையில் குறித்த இரு மாணவர்களும் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

குறித்த இரண்டு மாணவர்களும் (19 வயது) இம்முறை கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற உள்ளவர்கள் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

வெலிவேரியா மற்றும் முடுங்கோட பகுதியைச் சேர்ந்த இரு மாணவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

சுற்றிவளைப்பில் 345 பேர் கைது

மேல் மாகாணத்தில் பொலிஸார் முன்னெடுத்த 23 மணி நேர விசேட சோதனை நடவடிக்கையில் 345 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையானது நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 5 மணிவரையான காலப் பகுதியிலேயே இடம் பெற்றுள்ளது.

இவர்களுள் ஹெரோயின் வைத்திருந்ததற்காக 135 பேரும், சட்டவிரோத அல்கஹோல் வைத்திருந்ததற்காக 88 பேரும், கஞ்சா வைத்திருந்ததற்காக 72 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்ததற்காக 20 பேரும் மற்றும் பல்வேறு குற்றச் சாட்டுகளுடன்தொடர்புடைய 30 பேரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ஜ-4)

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

ஓய்வுபெறவுள்ள தேசப்பிரிய

(கொழும்பு)

பதவிக் காலம் முடிவடை வதற்கு முன்னரே தேசிய தேர் தல்கள் ஆணைக்குழு தலை வர் மகிந்த தேசப்பிரிய ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள் ளார்.

இவரின் பதவிக்காலம் இவ் வருடம் நவம்பர் மாதத்தி லேயே முடிவடைகின்றது. எனினும் செப்டெம்பர் மாதமே பதவியில் இருந்து விலகப் போவதாக தெரிவித்துள் ளார்.

தனிப்பட்ட காரணங்களு க்காகவே பதவியில் இருந்து விலகுவதற்கு மகிந்த தேசப்



பிரிய தீர்மானித்துள்ளார்.

இவர் 37 வருடங்கள் தேர் தல் பணிகளில் தன்னை ஈடு படுத்தி கொண்ட ஒருவர். அவ்வாறாயின் நடைபெற வுள்ள பொதுத்தேர்தலே மகிந்த தேசப்பிரியவின் இறுதித் தேர் தல் பணியாக கூட அமை யலாம் என்பதும் குறிப்பிட த்தக்கது. (ஜ-4)

ஆன்மீகம்

வெற்றியின் நண்பர்களாக இருப்போம்!



'குணத்தை மாற்ற குரு இல்லை 'என்று பலர் சொல்ல நாம் கேள்விப்பட்டிருப் போம். அதேசமயத்தில் குருநாதரே கண் ணெதிர் காணும் கடவுள் என்றும் நாம் கொள்கிறோமே. அப்படியானால் ஒருவனின் குணங்களை அவராலேயே மாற்ற முடியாதா என்றால், ஆம். அவர் அறிவு விளக்கை ஏற்றி வைத்து நம் இதய வீட்டின் இருளைப் போக்குவாரே தவிர மனத்திற்குள் இருக்கும் மாசுகளை அவரால் போக்க முடியாது.

ஒரு விளக்கு ஏற்றப்படுமானால் அது வீட் டிற்குள் இருக்கும் அனைத்தையும் நமக்குக் காட்டுமே தவிர, அவ்விடத்தைத் தூய் மையாக்குமா? அழுக்குகளை அது காட்டும். நாம் தான் அகற்ற வேண்டும். அப்படித் தான் அறிவு.

இது தீயது, இது தவறானது, இதை மேற் கொள்ளலாம்.இதை ஒதுக்கிவிடலாம் என்று சுட்டிக்காட்டும். நாம் தான் நல்லொழுக் கத்தை செயற்பாட்டில் கொண்டுவர வேண் டும். குணத்தை மாற்ற குரு இல்லை என் றால் உன்னை நீயே உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றுதான் பொருள். ஒரு திரை ப்படத்தில் அல்லது நாடகத்தில் இயக்குநர் சொல்லும் வண்ணம் கதாநாயகன் நடித்துப் புகழ் பெற்று விடலாம். ஆனால்,வாழ்க்கை எனும் திரைப்படத்தில் இயக்குநர், கதா நாயகன் இருவரும் ஒருவரே.

அதனால் தான் திருவள்ளுவர் கூறுகிறார்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று.

எந்தத் துறையில் நம்மால் பளிச்சிட முடியும்.,புகழ் பெற முடியும் என்று நாமே தேர்ந்து நம்மை உருவாக்கிக் கொண்டால் தான் வாழ்வில் வெற்றிபெற முடியும். ' தீதும் நன்றும் பிறர் தர வாரா ' என்ற புறநானூற் றின் 'சொற்றொடரைப் புரிந்து கொண்டு செயற்படுத்தினால் வாழ்வெனும் தொடரில் நம்மை நாமே இயக்கிக் கொண்டு பலரும் பாராட்ட சிறந்த கதாநாயகனாகக் காட்சி அளிக்கலாம்.

' கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக '

என்கிறது திருக்குறள்.

மேற்கொள்ள வேண்டியவை என்னென்ன என்பதைக் கல்வி காட்டுமே தவிர, படித்த நாம் தானே அதைப் பழக்கத்தில் கொண்டு வர வேண்டும். தொட்டிற் பழக்கம் தான் நால்வர் தோளில் துயிலும் வரை நீடிக்கும். ஆகவே நம்மிடம் தவறாக வேரூன்றிவிட்ட தீய பழக்கங்களை அறிவின் துணையால் அறிந்து கொண்டு அகற்றுபவனே வாழ்வில் சிறக்க முடியும்.

'பழக்கம் தவிர,பழகு' என்கிறது பழம் பாடல் ஒன்று. கேரளத்தில் நார ணத்து பிராந்தன் என்ற ஒருவர் இருந்தார். சிறந்த ஞானம் பெற்ற வராக இருந்தாலும் அவர் செய்கை மக்களுக்கு விரோதமாகவும், வேடிக் கையாகவுமே விளங்கியது. அப்படி அவர் என்ன தான் செய்தார்? தூக்க முடியாத கனம் கொண்ட ஒரு கருங் கல்லைக் கஷ்டப்பட்டு சுமந்தபடி அவர் காலையில் மலை மீது ஏறுவார். மலை முகட்டை அடைந்த பின் தூக்கிச் சென்ற பாறையைக் கீழே உருட்டி விடுவார்.

கீழே விழும் பாறையைப் பார்த்த படி இரு கைகளையும் கொட்டிய வண்ணம் 'கலகல' என்று ஒரு பேய்ச் சிரிப்பு சிரிப்பார். 'ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?' என்று சிலர் அவரைக் கேட்டனர். அதற்கு அவர் சொன் னார்.

'வாழ்க்கையில் உயர் நிலையை அடைவதும், நல்ல பழக்கங்களை மேற்கொண்டு புகழ்பெறுவதும், கல் லைத் தூக்கிக்கொண்டு மலையேறு வது போல் மிகவும் கடினமானது.

பயனற்ற தீய பழக்கங்களில் சிக்கு வதும், கெட்ட பெயர் எடுப்பதும் வெகு சுலபம் என்பதை அனைவரும் அறிந்து கொள்ளவே இப்படி அன் றாடம் செய்கிறேன் '

தொடரும்..

செய்திச்சுருக்கம்

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான பிர சார நடவடிக்கைகள் அனை த்தும் நேற்றுடன் நிறைவ டைந்துள்ளன.

அதன்படி பொதுத் தேர்தல் தொடர்பான கூட்டங்களை நட த்துதல், வீடு வீடாகச் செல் லுதல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், விளம்பரப் பலகைகளைக் காண்பித்தல், சுவரொட்டிகளைக் காண்பித் தல், தேர்தல் தொடர்பான விளம்பரம் செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் அனைத்திற் கும் நேற்றுடன் தடை விதிக்க ப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்றுடன் ஆரம்பமாகிய அமைதிக் கால த்தில், எந்தவொரு சட்டவி ரோத நடவடிக்கைகளிலும் ஈடு படாது, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த அனைவரும் ஆதரவளிக்க வேண்டுமென அந்த ஆணை க்குழு கோரிக்கை விடுத்து ள்ளது. (ஜ-4)

332 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ்தொற்று அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் தங் கியிருந்த 332 இலங்கையர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நாடு திரும்பியுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் தங்கியிருந்த 332 இலங் கையர்கள், ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்த மான விசேட விமானம் ஒன் றின் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்த டைந்துள்ளனர்.

குறித்த அனைவரும் பி.சி. ஆர்.பரிசோதனைக்கு உட் படுத்தப்பட்டு தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக விமான நிலையத்தக வல்கள் தெரிவித்துள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட தாக அடையாளம் காணப்பட்ட 2815 பேரில் தற்போது 365 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் கொரோனா தொற்றினால் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார்மடம்	சாவகச்சேரி	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	120	110	70	120
உருளைக்கிழங்கு	140	120	120	140
பச்சைமிளகாய்	200	220	200	200
தக்காளி	80	80	70	80
மரவள்ளிக்கிழங்கு	120	120	120	80
கோவா	120	140	120	120
கரட்	120	140	140	150
பூசணி	60	40	50	80
புடோல்	50	60	60	80
வாழைக்காய்	140	120	100	120
சின்ன வெங்காயம்	150	120	120	140
பெரிய வெங்காயம்	80	100	100	120
பாகற்காய்	160	140	140	200
வெண்டிக்காய்	50	80	60	100
கருணைக் கிழங்கு	120	130	100	120
பயற்றங்காய்	100	120	80	120
லீக்ஸ்	80	90	80	100
பீற்றூட்	100	100	100	100
கறிமிளகாய்	250	300	250	300
முருங்கைக்காய்	100	120	100	80
போஞ்சி	150	220	300	250
கத்தரிதம்புள்ள	100	80	--	120
கீரை - 1 பிடி	30	25	30	50
தேசிக்காய்	150	200	140	120
தேங்காய் (ஒன்று)	70	60	60	60-80
இராசவள்ளி	--	--	300	--
வெங்காயப்பூ	200	200	180	200
முள்ளாங்கி	100	80	60	120
பொன்னாங்காணி	40	30	40	30
வல்லாரை	20	50	20	20
ஈரப்பலா	50	70	50	60

மக்கள் நேர்மையானவர்களா?

ஒருநாள் அக்பர் "எனது அரசாட்சியில் மக்கள் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக இருப்பதைப் பற்றி உன்னுடைய கருத்து என்ன என்று கேட்டார்.

உடனே பீர்பால், இதற்கு நான் பதிலளிக்க வேண்டுமென்று தாங்கள் விரும்பினால் அரசே...மக்கள் அனைவரையும் விருந்துக்கு வரச் சொல்லி அழைப்பு விடுங்கள்.

ஆனால் விருந்துக்கு வரும் போது ஒரு குடத்தில் பால் கொண்டு வர வேண்டும்என்று உத்தரவிட வேண்டும்," என அக்பரிடம் வேண்டுகோள் வைத்தார்.

அக்பரின் ஆணைப்படி விருந்து பற்றி பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

அரசர் அறிவித்த விருந்து நடைபெறும் நாள் வந்தது. அக்பர், பீர்பால் உட்பட அரச வையில் முக்கிய பதவிகளில் இருப்போர் அனைவரும் கூடியிருந்தனர்.

திடலின் பிரதான வாசலில் மிகப் பெரிய பாத்திரம் ஒன்று மூடி போட்டு வைக்கப்பட்டிருந்தது. ஒருமூடியில் பெரிய ஓட்டை போடப்பட்டிருந்தது.

பொதுமக்கள் அனைவரும் தாங்கள் கொண்டு வந்த பாலை, மூடியிலிருந்த ஓட்டை வழியாக பாத்திரத்தில் ஊற்றிவிட்டு அரசவைக்குள் நுழைந்தனர்.

அக்பர், பீர்பாலைப் பார்த்து நீ சொன்னபடி செய்தாகிவிட்டது. இவ்வளவு பாலையும் என்ன செய்யப் போகிறோம் என்று கேட்டார்.

உடனே பீர்பால் காவலர்களைப் பார்த்து, பாத்திரத்தை மன்னருக்கு அருகில் கொண்டு வரச் சொன்னார்.

அக்பரிடம் பீர்பால், பால் மூடி வைத்திருக்கும் பாத்திரத்தின் மூடியை எடுத்துப் பார்க்கும்படி வேண்டினார். அதேபோல் அக்பரும் மூடியை நீக்கி விட்டுப் பார்த்தார்.

பால் இருக்கவேண்டிய பாத்திரத்தில் வெறும் தண்ணீர் மட்டும் இருந்ததைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

ஆனால் இதை முன்பே எதிர்பார்த்த பீர்பால், மக்களின் நேர்மைபற்றி என்னிடம் நீங்கள் கேட்ட கேள்விக்கு இது தான் பதில் அரசே.

மற்றவர்கள் பால் கொண்டு வரட்டும் நாம்தண்ணீர்கொண்டு போய் பாத்திரத்தில் கொட்டினால் யார் கண்டுபிடிக்க முடியும் என்று ஒவ்வொருவரும் நினைத்துள்ளனர்.

எனவே தான் பாத்திரம் முழுதும் தண்ணீர் உள்ளது.

உடன் இருப்பவர்களின் பேச்சைக் கேட்டு எந்த முடிவுக்கும் வந்து விடக்கூடாது அரசே.." என்று சிரித்தபடியே கூறினார்.

பீர்பாலின் அறிவுக்கூர்மையை எண்ணி வியந்து பாராட்டி பீர்பாலைத் தழுவிக் கொண்டார்.

நீதி: மற்றவர்கள் சொல்லும் கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் சோதித்துப் பார்க்க வேண்டும். பிறகுதான் கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்

ஆனால், சமாதானம் பேசச்சென்ற தன் வீரனின் கைகளுக்குப் பூட்டுப் போட்டனர் சேரர்கள். சிறையில் அடைத்தனர். ராஜராஜனுக்கு இரத்தம் முறுக்கேறியது.

நாம் ஒருவரையும் ஏமாற்றவும் இல்லை; துரோகமிழைக்கவுமில்லை. ஆனால் யாரும் நம்மை ஏமாற்றினால் அல்லது துரோகமிழைத்தால் பதிலடி கொடுக்கத் தயங்கவேண்டியதில்லை.

நம் எதிரிகளால் நம்முடைய உரிமை, சுதந்திரம், கௌரவம் பாதிக்கப்படும் போது கைகட்டிக் கொண்டிருப்பது கோழைத்தனம்.

பாம்பு படமெடுக்கும் போது கையில் கம்பு தூக்குவதுதான் சாமர்த்தியம். ஒரு நொடியில் முடிவெடுத்தார் ராஜராஜன். நிலைமை, கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல் என்று திசைமாறிப் போனது.

ராஜராஜனின் பரம வைரிகளாக இருந்தவர்கள் பாண்டியர்களும் அவர்களுடன் சிநேகத்துடன் உறவாடும் சேரர்களும்.

திடீரென்று சோழர்களின் இராஜ்ஜியம் முளைத்துப் பலம் பெற்றதுமே பாண்டியர்களும் சேரர்களும் நடுநடுங்க ஆரம்பித்தார்கள். அதிலும் ராஜராஜன் ஆட்சிக்கு வந்த மறுநிமிடம் அவர் எப்போது வேண்டுமானாலும் தங்களைத் தாக்க முற்படலாம் என்று இருநாட்டு அரசர்களும் உசாராக இருந்தார்கள்.

சேரநாட்டிற்கு நான்கு அரண் வாசல்கள். தெற்கு வாசல், காந்தளூர்ச்சாலை. மேற்கு வாசல் அரபிக் கடலோரம் உள்ளது. கிழக்கு வாசலாக பாண்டிய, சேர நாட்டு எல்லையிலுள்ள குணவாயில். வடக்கு வாசல், குடமலை. கிட்டத்தட்ட சேரர் சாம்ராஜ்ஜியத்தின் இதயப்பகுதி என்று இதைச் சொல்லலாம்.

அப்போது குடகின் மேற்குத் தொடர்ச்சி மலையில் உதகை இருந்தது. தன் தூதரை அனுப்பி சேர நாட்டு மன்னர்களிடம் சமாதானம் பேச வைத்த ராஜராஜனின் திட்டம் நொடியில் தவிடுபொடியானது.

தூதரைக் குடமலை நாட்டின் மன்னர் சிறை பிடிக்கவே, ராஜேந்திர சோழன் தலைமையில் குடமலை நாட்டை நோக்கி சிறிப்பாய்ந்தது போர்ப் படை.

ராஜராஜன் எந்தவழியாக சேர நாட்டுக்குச் சென்றிருப்பார் என்ற சில கருத்துக்கள் உள்ளன.

நிச்சயம் பாண்டிய நாட்டு வழியாக சேர நாட்டிற்குப் படையெடுத்துச் சென்றிருக்க முடியாது.

கொங்கு நாடு வழியாகவே ராஜராஜன் சேர நாட்டிற்குச் சென்றிருப்பார். 'ஈரோன்பது சுரமும் கொண்டு மலை கொண்டான்' என்கிறது கல்வெட்டு.

18 காடுகள் நிச்சயம் பாண்டிய நாட்டில் இல்லை. ஆனால் பாலக்காட்டில் அடர்த்தியான காடுகள் உள்ளன.

எனவே பாலக்காடு வழியாகத்தான் சோழர் படை சென்றிருக்க வேண்டும். குடமலையைச் சென்று சேர்வது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

18 காடுகளைத் தாண்டிச் செல்லவேண்டியிருந்தது. இங்கே, ராஜராஜனுக்குக் கைகொடுத்தது, அவர் மகன் ராஜேந்திர சோழன்.

புலிக்குப் பிறந்தது எப்போதுமே புலியாகவே இருந்து விடுவதில்லை.

(தொடரும்)

துணிந்து நின்று செயல்படுகிறன்தான் அடிக்கடி வெற்றி சிகரத்தை அடைகின்றான்.

~ ஜவகர்லால் நேரு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

ஒடுவதை நிறுத்து; நீ திருப்பித் துரத்து

சுவாமி இராமகிருஷ்ணபரமஹம்சர் ஒரு மரத்தின் கீழ் இருக்கிறார்.

அவ்வழியால் ஒருவன் ஆற்றலைய ஓடி வருகிறான். அவன் மீது பரிதாபம் கொண்ட பரமஹம்சர் மகனே! ஏன்? ஓடுகிறாய் என வினவுகிறார்.

அதற்கு அவன்; சுவாமி என்னை ஒரு குரங்கு துரத்தி வருகிறது. அதுதான் ஓடுகிறேன் என்கிறான்.

நீ ஓடுவதால் குரங்கு உன்னைத் துரத்துவதை நிறுத்திவிட்டதா? எனக் கேட்கிறார் இராமகிருஷ்ணர். இல்லை எனப் பதில் தருகிறான் அவன்.

அப்படியானால் ஏன் ஓடுகிறாய்? எனக் கேட்கிறார் சுவாமி.

நான் என்ன செய்ய வேண்டும் சுவாமி என வினவுகிறான் அவன்.

மகனே! குரங்கு உன்னைத் துரத்துகிறது. நீயோ அதற்குப் பயந்து ஓடுகிறாய். ஆனால் குரங்கோ உன்னை விடுவதாக இல்லை.

எனவே குரங்கு துரத்துவதும் நீ ஓடுவதுமான செயல் ஒழுங்கை மாற்றிக் கொள் என்கிறார் பரமஹம்சர்.

சுவாமிகள் கூறியதைப் புரிந்து கொள்ளாத அந்த நபர் சுவாமி புரியவில்லை என்கிறார்.

மகனே! ஓடுவதை நிறுத்தி, குரங்கைத் திருப்பித் துரத்து என்கிறார் சுவாமி.

அச்சமயம் குரங்கு துரத்தி வருவதைக் கண்ட அவன், சுவாமிகளின் ஆலோசனைப்படி துணிச்சலோடு சத்தம் வைத்தபடி குரங்கைத் துரத்த குரங்கு திரும்பி எடுத்தது ஓட்டம்.

அப்போதுதான் சுவாமிகள் கூறிய தத்துவம் அவனுக்குப் புரிந்தது. ஒரு விடயத்தை நாம் செய்யும்போது அதில் எந்தப் பயனும் ஏற்படவில்லையாயின் அதனை மாற்றிக் கொள்வது கட்டாயமானது.

மாற்றத்தை விரும்பாத எவரும் இலக்கை அடைந்ததான வரலாறு ஏதுமில்லை. எனவே பயனற்ற கருமத்தைத் தொடர்ந்து செய்வதை நிறுத்தி, நாம் செய்கின்ற கருமத்தை மாற்றிப் பார்க்க வேண்டும்.

ஏற்கெனவே இருப்பதால் எந்தப் பயனும் இல்லை எனும்போது மாற்றம்தானே மாற்று வழியாகிறது.

ஆக, துணிச்சலோடு மாற்றத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். அந்த முடிவில் அனைவரும் உறுதியாக இருங்கள். ஒட்டுமொத்தமாக அனைவரும் ஒன்றுபட்டு **மாற்றம்** அதுவே எங்களுக்கான ஒரே வழி என்று உரக்கச் சொல்லுங்கள்.

இவ்வாறு சொல்லும்போது உங்களின் ஒற்றுமையே நீங்கள் முதலில் கண்ட **மாற்றம்.** இந்த **மாற்றம்** உயர்வானது. மகிழ்வானது. கனதியானது.

அந்த ஒற்றுமை எனும் **மாற்றத்தோடு மாற்றத்தைப்** படையுங்கள். எல்லாம் வெற்றியாகும்.

சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தைச் செலுத்த 90 ஆயிரம் மில்லியன் ரூபாய் தேவை

ரணில் விக்கிரமசிங்க கணிப்பு

(கொழும்பு)

கடந்த மாதம் அரச வருமானம் 50 ஆயிரம் மில்லியனாக இருந்த போதிலும் அது அரச சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தை வழங்கவும் போதுமானதாக இல்லை என ஜக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஒரு மாதம் அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தை வழங்க 90 ஆயிரம் மில்லியன் ரூபாய் அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

கெஸ்பேவ, மீகொட, மத்தேகொட, ஜயவடகம, மகரகமை ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலின் பின்னர் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து நாம் நிர்கதியான நிலைமைக்கு உள்ளாகி வருகின்றோம்.

எதிர் காலத்தில் என்ன நடக்கும் என்பதை எவராலும் புரிந்துக்கொள்ள முடியவில்லை.

எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையை இழந்திருப்பது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பெரிய பிரச்சினையாகும். எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்க அரசாங்கம் எவ்வித தீர்வுகளையும் முன்வைக்கவில்லை.

நாம் கஷ்டமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இந்த நிலைமையில் இருந்து மீள்வதா? இல்லையா? என்பது குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும்.எம்மிடம் இருந்த அந்நிய செலாவணி பொது ஜன பெரமுன அரசாங்கத்தின் கீழ் முற்றாக இல்லாமல் போயுள்ளது.

நாங்கள் ஆட்சி அதிகாரத்தை பெற்று கடனை திரும்ப செலுத்தக் கூடிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பினோம்.

2018 ஆம் ஆண்ட ளவில் வரவு செலவுத் திட்டத்தில் நிதிக் கையிருப்பை அதிகரித்தோம்.

கடனைச்செலுத்த ஆரம பித்தோம். அபிவிருத்திக் காக நிதியை ஒதுக்கி னோம். எமது வருமானத் திலேயே இதனை செய் தோம். வட்டியை செலுத்த மாத்திரமே வெளியில் கடனை பெற்றோம்.

2015 ஆம் ஆண்டு நாம் ஆட்சி பொறுப்பை ஏற்றபோது, இலங்கை கடனை செலுத்த முடியாத நிலைமையில் இருந்தது. எனினும் அந்த சுமையை நாங்கள் மக்கள் மீது சுமத்தவில்லை.

கௌரவமான நாடாக கடனை திரும்ப செலுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்தோம்.

கடனை செலுத்தியவாறு நாட்டை அபிவிருத்தி செய்ததுடன் மக்களுக்கும் நிவாரணங்களை வழங்கினோம்.

பொதுஜன பெரமுனவின் ஆட்சியின் கீழ் இந்த நிலைமை முற்றாக மாறியுள்ளது எனவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ஞா)

தமிழக ஆளுநருக்கு கொரோனாத் தொற்று

(சென்னை)

தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் சென்னை, கிண்டியில் உள்ள ராஜ்பவனில் கடந்த வாரம ஆளுநர் மாளிகையின் பிரதான வாயிலில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள் என 84 பேருக்கு நோய் தொற்று இருப்பது உறுதியானது.

இதன் தொடர்ச்சியாக ஆளுநரின் உதவியாளர் உட்பட மூவருக்கு நோயத் தொற்று இருப்பது உறுதியானதை அடுத்து வைத்தியர்களின் ஆலோசனைப்படி ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார்.

இந்நிலையில் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனைகளின் பிரகாரம் பன்வாரிலால் புரோஹித்திற்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்படத்தக்கது. (ஞா)

இரக்கமிக்க அரசை உருவாக்குவேன்-சஜித்

(கொழும்பு)

நாட்டு மக்களின் இன்ப, துன்பங்கள் தொடர்பில் அக்கறை கொண்ட இரக்கமிக்க அரசாங்கத்தை உருவாக்குவதாக தெரிவித்த ஜக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரமதாசவின் புதவல்வனான தான் வாழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாகவும், தன்மீது நம்பிக்கை கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பு-15 இல்அமைந்துள்ள தொடர்மாடி குடியிருப்பு தொகுதியில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஞா)

வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உண்மையான நாணயமாக நடப்பவனுக்கு மக்கள் நெஞ்சத்தில் ஓர் சிறந்த இடம் உண்டு.

- பெரியார்

வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

அறுகுணச் சீரமைப்பு

அறுகுணம் என்பது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற பெயர்களில் வடநூலார் குறிப்பிட்டுள்ள ஆறுவகை மனோ நிலைகள். இவை தமிழ் மொழியில் முறையே பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு-தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என விளக்கப்படுகின்றன. இவை எல்லா உயிர்களிடத்தும் அமைந்துள்ளன. மனிதனிடம் இந்த மனோ நிலைகள் எழுச்சி பெறும் போது தீய செயல்களைச் செய்து விடுவான். அதனால் பொருள் அழிவும், மகிழ்ச்சி இழப்பும் விளையும்.

தெளிந்த அறிவோடும், விழிப்போடும் இருந்தால் இந்த ஆறு மனோ நிலைகளில் பேராசையை - நிறை மனமாகவும் சினத்தைப் - பொறுமையுடமையாகவும் கடும் பற்றை - ஈகையாகவும் முறையற்ற பால் வேட்பைக் கற்பாகவும் உயர்வு - தாழ்வு மனப்பான் மையை - நேர் நிறையுணர்வாகவும் வஞ்சத்தை - மன்னிப்பாகவும் சீரமைத்துக் கொள்ளலாம். தனக்கும் பிறர்க்கும், தற்காலத்திலும், பிற்காலத்திலும், அறிவிற்கும், உடல் உணர்ச்சிக்கும் வருத்தம் எழாத அளவிலும், முறையிலும் செயலாற்றி இன்பமாக வாழலாம்.

தேவையும், பழக்கமுமசூழ்நிலைகளும் உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன. அனுபவ நினைவுகளும், சிந்தனையும், தெளிவும் அளிக்கின்ற நல்ல முடிவைக் கொண்டு உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் திறனே "அறிவு" எனப்படும். உணர்ச்சிகளால் அறிவு மயங்கித் தனது நிலை மறந்து செயலாற்றினால் அதனை "மயக்கம்" அல்லது "மாயை" என்று கூறுகிறோம். அறிவு நிலை குலைந்த மயக்கத்தில் தான் தீய செயல்கள் விளைகின்றன.

ஐ.பி.எல். போட்டிகளை நேரில் பார்க்க இரசிகர்களுக்கு அனுமதி?

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ள ஐ.பி.எல். ரி-20 லீக் தொடரின் போட்டி களை, நேரில் பார்க்க இரசி கர்களுக்கு அனுமதி வழங்க ப்பட வாய்ப்புள்ளது.

அமீரகத்தில் பெரும்பாலான நிகழ்ச்சிகளில் பங்கேற்க அனுமதிக்கும் 30 முதல் 50 சதவீதம் பேர் போட்டியை காண அனுமதிக்கப்பட வாய்ப்பு ள்ளதாக ஐக்கிய அரபு அமீரக கிரிக்கெட் சபையின் செயலாளர் முபாஷ்சிர் உஸ்மானி தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'கௌரவமிக்க



இந்த தொடரை எங்கள் நாட்டு மக்கள் நேரில் பார்க்கும் அனு பவத்தை பெற வேண்டும் என்று விரும்புகிறோம்.

இங்கு நடக்கும் பெரும் பாலான நிகழ்ச்சிகளில் 30 முதல் 50 சதவீதம் பேர் பங் கேற்க அனுமதி வழங்கப்படு கிறது.

நாங்களும் அதே சதவீத எண்ணிக்கையை எதிர்பார்க் கிறோம். விளையாட்டரங்கிற் குள் இரசிகர்களை அனுமதிப் பதற்கு எங்கள் அரசு ஒப்புதல் அளிக்கும் என்று நம்புகி றோம்.

அமீரக அரசின் தீவிரமான நடவடிக்கையால் எங்கள் நாட் டில் கொரோனா பாதிப்பு குறை ந்துள்ளது. பாதுகாப்பு நடை முறைகளை கடைப்பிடித்து கிட்டத்தட்ட தற்போது இயல் பான வாழ்க்கைக்கு திரும்பி விட்டோம்.

ஐ.பி.எல். தொடருக்கு இன் னும் கால அவகாசம் உள்ளது. அதற்குள் கொரோனா பாதிப்பு மேலும் குறைந்து விடும். 14 அணிகள் இடையிலான உலக கிண்ணத்தகுதி சுற்றை கடந்த ஆண்டு நடத்தினோம்.

இதேபோல் இந்த மிகப் பெரிய தொடரையும் எங்களால் வெற்றிகரமாக நடத்த முடியும்' எனக்கூறினார்.

13ஆவது ஐ.பி.எல்.கிரிக் கெட் தொடர், ஐக்கிய அரபு அமீர கத்தில் உள்ள டுபாய், அபுதாபி, சார்ஜா ஆகிய இடங்களில் எதிர்வரும் செப்டெம்பர் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

ஜோகோவிச்- நடால் அமெரிக்க டென்னிஸ் தொடரில் விளையாட வாய்ப்பு

ஆண்கள் டென்னிஸ் விளையாட்டின் உலகின் முன்னணி வீரர்களான நோவக் ஜோகோவிச், ரபேல் நடால் உள்ளிட்ட வீரர்கள், அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின் றது.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்று பரவலின் தாக்கம் தீவிரமாக உள்ள

நிலையில், இத்தொடரில் விளையாடுவதிலிருந்து வீரர், வீராங்கனைகள் பின்வாங்கி வருகின்றனர்.

ஆகவே, முன்னணி டென் னிஸ் வீரர்களும் இத்தொட ரிலிருந்து விலகுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக கூற ப்பட்டது.

ஆனால், தற்போது நோவக் ஜோகோவிச், ரபேல் நடால் டொமினிக் தீய்ம், அலெக் சாண்டர் ஸ்வெரேவ், சிட்சி பாஸ், டேனில் மெட்விடேவ் ஆகியோர், அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடருக்கு முன் னோட்டமாக கருதப்படும் சின் சினாட்டி பகிரங்க டென்னிஸ் தொடரில் விளையாட இருப் பதை உறுதிப்படுத்தியுள்ள னர்.

எனவே, இவர்கள் அனை வரும் எதிர்வரும் அமெ ரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலும் விளையாடு வார்கள் என எதிர்பார்க்கப்படு கின்றது.

சின்சினாட்டி பகிரங்க டென்னிஸ் தொடர், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிட த்தக்கது. (4)

சிறந்த தலைவர் டோனியா? பொண்டிங்கா?

அப்ரிடி பதில்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலை வரான ரிக்கி பொண்டிங்கை விட இந்திய கிரிக்கெட் அணி யின் முன்னாள் தலைவரான மகேந்திர சிங் டோனிதான் சிறந்த அணித்தலைவர் என ஷயிட் அப்ரிடி தெரிவித்து ள்ளார்.

கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன் னாள் அணித்தலைவரான ஷயிட் அப்ரிடி டுவிட்டரில் ரசி கர்களுடனான கேள்வி-பதில் உரையாடலின் போது கூறு கையில்,

"அவரிடம் ரசிகர் ஒருவர் பொண்டிங் மற்றும் டோனி

இவர்களில் யார் சிறந்த அணி த்தலைவர் என கேட்டதற்கு, எனக்கு தெரிந்தவரை டோனி தான் சிறந்த அணித்தலைவர். ஏனென்றால் அவர் இளம் வீரர்கள் அடங்கிய அணியை கட்டமைத்து வழி நடத்தி னார். ஆனால் பொண்டிங் விடயத்தில் ஸ்டீவ் வோதான் அவுஸ்திரேலிய அணியை கட்டமைத்தார்.

அந்த அணியைத்தான் பொண்டிங் வழிநடத்தினார். அதனால் டோனியா? பொண்டிங்கா? என வரும் போது டோனிதான் சிறந்தவர்" என பதிலளித்தார் ஷயிட் அப்ரிடி. (4)

ஓய்வு காலத்தை நெருங்கியுள்ளேன்

ரொஜர் பெடரர்

டென்னிஸ் போட்டியிலி ருந்து ஓய்வு பெறும் காலத்தை நெருங்கி விட்டதாக டென்னிஸ் ஜாம்பவானான ரொஜர் பெடரர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச டென்னிஸ் அர ங்கில் அதிக கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற வீரராக திகழும் சுவிட்ஸர்லாந்தின் ரொஜர் பெடரர் இதுவரை 20 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். இதில் 8 விம் பிள்டன் பட்டங்கள் அடங்கும். டென்னிஸ் தரவரிசையில் 310 வாரங்கள் தொடர்ச்சியாக முதல் இடத்தை அலங்கரித்த சாத னையாளராகவும் திகழ்கிறார்.

சில மாதங்களுக்கு முன்பு அவரது வலது முழங்கால் முட் டியில் ஏற்பட்ட உபாதைக்கு சத்திர சிகிச்சை செய்து கொண்ட பெடரர் இவ்வாண்டு எஞ்சிய போட்டிகளில் விளையாடமாட் டேன் என்றும் அடுத்த ஆண் டில் புத்துணர்ச்சியுடன் மீண்டும் களம் திரும்புவேன் என்றும் கூறியிருந்தார்.

இந்நிலையில் 38 வய தான பெடரர் ஓய்வு கட்டத்தை நெருங்கி விட்டதாக வெளிப் படையாக கூறியுள்ளார்.

தற்போது தரவரிசையில் 4 ஆவது இடத்தை வகிக்கும் பெடரர் அளித்த ஒரு பேட்டியில் 'எனது டென்னிஸ் வாழ் க்கையில் நான் இறுதி கட்டத்தில்



இருப்பதை அறிவேன். அடுத்த 2 ஆண்டுகளில் என்ன நடக்கும் என்பதை என்னால் கூற முடியாது. அதனால் தான் ஒவ்வொரு ஆண்டாக திட்ட மிட்டு செயற்பட்டு வருகிறேன். ஆனால் இப்போதும் மகிழ் ச்சியுடன் விளையாடி வரு கிறேன். எப்போது தளர் வடை கிறேனோ அப்போது விளையாடுவதை நிறுத்தி விடு வேன். டென்னிஸை பொறுத்த வரை வயதானாலும் நிச்சயம் விளையாட முடியும். ஆனால் தொடர்ந்து கடின பயிற்சிகளில் ஈடுபட முடியாது.

பெடரர் ஏற்கனவே 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் இரட்டையர் பிரிவில் தங்கப்ப தக்கமும் 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் வெள்ளிப் பத க்கமும் பெற்றுள்ளார்.

மேலும் அவர் அடுத்த ஆண்டுடன் டென்ஸிலிருந்து விடைபெறுவார் என்று கருத ப்படுகிறது. (4)

ஹர்திக் பாண்ட்யா முதல் 10 இடத்திற்குள் வரமுடியாதது துரதிர்ஷ்டமே-இர்பான் பதான்

ஒல்-ரவுண்டர் வரிசையில் ஹர்திக் பாண்ட்யா முதல் 10 இடத்திற்குள் வர முடியாதது துரதிர்ஷ்டம் என்று முன்னாள் வீரர் இர்பான் பதான் தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

இங்கிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து 2-1 என கைப் பற்றியது. இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் வேகப் பந்து வீச்சாளரும் ஒல்-ரவுண்டருமான பென் ஸ்டோக்ஸ்.

இதனால் ஐசிசி ஒல்-ரவுண்டர் தரவரிசையில் முதல் இடம்பிடித்தார்.

பென் ஸ்டோக்ஸ் போன்ற வீரர் இந்திய அணிக்குத் தேவை.

இந்திய அணி ஒல்-ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யா இதுவரை தரவரிசையில் முதல் 10 இடத்திற்குள் வராதது துரதிர்ஷ்டமே என அவர் தெரிவித்தார். (4)

பெற்றோல்...

போட்டியிடும் வேட்பாளரின் கட்சி அலு வலகத்தின் மீதே தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.

அலுவலகத்தின் முன்புற வீதியால் வந்தவர்களே தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்தவர்கள் கூறுவதுடன் மூவர் தாக்குதலை நடத்திவிட்டு ஓடுவதை அயல வர்கள் அவதானித்து தமக்கு கூறியதாக வும் தெரிவித்தனர்.

எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படாத போதிலும் வவுனியா பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஞா)

இந்தியாவின்...

கொரோனா வைரஸ் தொற்றால் உத் தர பிரதேச தொழில்துறை கல்வி அமைச் சர் கமலா ராணி உயிரிழந்துள்ளார்.

62 வயதான இவருக்கு கடந்த ஜூலை 18ஆம் திகதி கொரோனா தொற்று வைரஸ தாக்கியிருப்பது கண்டறியப்பட் டது.

இதையடுத்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் சஞ்சய் காந்தி மருத்துவ அறி வியல் மையத்தில் உயிரிழந்துள்ளார். (ஞா)

அரசியலமைப்புப்...

இந்தக் கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட அரசியல மைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அரச சேவை ஆணைக்குழு ஆகியவற்றில் காணப்படும் வெற்றிடங்கள் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகத்தில் காணப்படும் வெற்றிடங் களை நிரப்புவது தொடர்பில் கலந்துரை யாடவுள்ளதாக அரசியலமைப்பு பேரவை யின் செயலாளரும், பாராளுமன்ற செய லாளர் நாயகமுமான தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

மேலும் நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்வனவு ஆணைக்குழு ஆகியவற்றி னால் முன்வைக்கப்பட்டுள்ள காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் இதன்போது மதிப்பீடு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஞா)

பாரிய வர்த்தக...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

பொதுஜன பெரமுனவில் பொதுத் தேர் தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் நேற்று அம்பாந்தோட்டைக்கு விஜயம் செய் திருந்த ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

'நான்கு பாரிய வர்த்தக நகர' திட்டத் தில் கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களும் உள்வாங்கப்படுகின்றன.

குறித்த நான்கு பாரிய நகரங்களில் துறைமுகம் மற்றும் விமான நிலை யத்தை மையப்படுத்தி பொருளாதார தாழ்வாரத்தை நிர்மாணித்து சர்வதேச சந்தையுடன் போட்டியிடுகின்ற நாடாக இலங்கையை கட்டியெழுப்புவதாக ஜனாதி பதி தெரிவித்துள்ளார்.

குடிநீர்ப் பிரச்சினை மற்றும் காட்டு யானை அச்சுறுத்தல்களுக்கு தீர்வாக முறையான மற்றும் திட்டமிடப்பட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதாக மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித் துள்ளார். (ஞா)

உச்ச பட்ச...

மகிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத் துள்ளார்.

தேர்தலில் வாக்களிக்கும் முறைமை, வாக்களிப்பு நிலையங்களில் பின்பற்ற வேண்டிய விடயங்கள், வாக்குபெட்டி களை பாதுகாப்பாக வைத்திருக்கும் முறை உள்ளிட்ட விடயங்கள் பற்றி தெளிவுபடுத்தி நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் விடுத்த அறிவித்தலிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் அவர் மேலும் கூறுகையில்,

வாக்களிப்பு நிலையங்கள்

வாக்களிப்பு நிலையங்களுக்கு முகக் கவசம் அணிந்து வருவது அத்தியாவசிய மானதாகும். வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியிலும் உட்செல்லும் போதும் வாக் களித்த பின்னரும் சனிடைசர் மூலம் கைகள் கிருமி நீக்கப்படும். வாக்காளர்கள் வரும் போது கறுப்பு அல்லது நீலப் பேனை கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்பட் டுள்ளது.

அவ்வாறில்லையெனில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பேனை அதிகாரிகளால் வழங்கப்படும். இவை மாத்திரமின்றி செல்லுபடியாகும் அடையாள அட்டையை எடுத்து வரவேண்டியது அத்தியாவசிய மானதாகும்.

வாக்களிக்கும் முறை

அரசியல் கட்சிகளினதும் சுயேட்சை குழுக்களினதும் பெயர்கள் அவற்றிக்குரிய சின்னங்களுடன் மேல் பகுதியில் காட்டப் பட்டுள்ளன. ஒவ்வொரு சின்னத்துக்கும் எதிரே ஒரு வெற்றுக்கூடு உள்ளது. வாக் காளர்கள் தாம் விரும்பும் எந்தவொரு கட்சிக்கோ அல்லது சுயேட்சைக் குழு வுக்கோ அதற்குரிய சின்னத்துக்கு எதி ரேயுள்ள வெற்றுக்கூட்டினுள் அடையாள மிட முடியும். வாக்கினை அடையாளமிடும் போது விரும்பிய சின்னத்துக்கு எதிரே யுள்ள வெற்றுக் கூட்டினுள் புள்ளடி யொன்றை (X) இட வேண்டும்.

ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒதுக்கப் பட்ட இலக்கங்கள் தேர்தல் மாவட்டத் திற்குள் போட்டியிடுகின்ற வேட்பாளர் களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்குச் சீட்டின் கீழ்ப்பகுதியில் காட்டப்பட்டுள்ளன.

வாக்குப்புக்களை அடையாளமிடும் போது வாக்காளர்கள் விரும்பிய வேட்பாளரின் இலக்கத்தின் மீது புள்ளடியொன்றை (X) இட வேண்டும்.

எண்ணிக்கையில் மூன்றுக்கு மேற் படாதவாறு வேட்பாளர்களுக்கு அதாவது மூன்றுக்கு மேற்படாத எண்ணிக்கை யான வேட்பாளர்களுக்கு அவர்களது இலக்கங்கள் மீது விருப்பு வாக்குகளை அடையாளமிட முடியும்.

ஒரு கட்சி அல்லது குழு சார்பாக வாக் கொன்று அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டு காணப்படுமாயின் அது செல்லுபடி யற்றதாகவே கருதப்படுவதோடு அந்த வாக்கு நிராகரிக்கப்படும்.

முதலில் கட்சிக்கு எதிரே வாக்கினை பதிவு செய்ய வேண்டும் என்பதோடு அதன் பின்னரே விருப்புக்களை அடை யாளமிட முடியும். வாக்களிப்பதற்கு புள் ளடியை (X) மாத்திரமே பயன்படுத்த முடியும்.

உச்சபட்ச பாதுகாப்புடன் வாக்களிப்பிற் கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப் பட்டுள்ளன. எனவே பயமின்றி வருகை தந்து அனைவரும் வாக்களிக்க வேண் டும்.

வாக்குப்பெட்டிகளின் பாதுகாப்பு

கோவிட்-19 வைரஸ் பரவல் காரண மாக தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அதிகாரிகளின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு வாக்கெடுப்பின் மறு நாள் வாக்கெண்ணும் பணிகளை நடத்த தீர் மானித்துள்ளதால் பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் எழக்கூடும். அவ்வாறு சந்தேகிப் பதற்கான அவசியமில்லை.

வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் வாக்குபெட்டி பூட்டினால் மூடப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட இரகசிய குறியீடு கொண்ட நாடா ஒட்டப்பட்டு அதன் பின்னர் வாக்கெண்ணியோரின் விபரங்கள் அடங்கிய ஆவணம் பெட்டியின் மேல் ஒட்டப்படும்.

அதனைத் தொடர்ந்து பொலித்தீன் பையொன்றில் பெட்டியை இட்டு இரகசிய எண் கொண்ட நாடாவால் பொதியிடப்படும். இந்த படிமுறைகளை மீறி வாக்குபெட்டி களில் எவராலும் வாக்குச்சீட்டுக்களை சேர்க்கவோ அல்லது மாற்றவோ முடியாது.

வாக்கெண்ணும் நிலையங்களுக்கு அரசியல் கட்சிகள் அல்லது சுயாதீன குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி தலா இருவர் மாத்திரமே வருகை தர முடியும் என்றார். (ஞா)

நீதியரசருக்கு...

சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணிக்கு எதிராக அநாமதேய துண்டுப்பிரசுரங்கள், போலிப் பத்திரிகைகள், முகவரி இல்லாத சில இணை யத்தளங்கள் மற்றும் போலிப் பெயர்களைக் கொண்ட அமைப்புகள் மூலம் பொய்ப் பிரசாரங்கள் செய்கின்ற முயற்சிகளில் சில தரப்பினர் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

எனவே இவை தொடர்பில் பொதுமக் கள் விழிப்பாக இருக்குமாறு கேட்கப்பட் டுள்ளது. (ஞா)

வேட்பாளர் உட்...

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் மாதிரி வாக்குச்சீட்டுக்களை கைவசம் வைத் திருந்த குற்றச்சாட்டில் வன்னி மாவட்ட வேட்பாளர் ஒருவர் உள்ளிட்ட நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளார்கள்.

இது தொடர்பில் தெரியவருகையில்,

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் மாதிரி வாக்குச்சீட்டுடன் கட்சி ஆதரவாளர்கள் நடமாடுவதாக தேர்தல் திணைக்களத் திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தக வல் அடிப்படையில் தேர்தல் திணைக் கள அதிகாரிகள் மேற்கொண்ட நட வடிக்கையில் வேட் பாளர் ஒருவரும் கட்சியின் ஆதர வாளர்கள் நால்வ ரும் கைது செய்யப் பட்டு புதுக்குடி யிருப்பு பொலிஸா ரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார்கள்.

சம்பவம் தொடர் பில் புதுக்குடியி ருப்பு பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற் கொண்டு வருகின் றனர். (ஞா-281)

தண்...

மைப்பின் வேட் பாளருமாகிய சிவ ஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கிட்டுப்பூங்காவில் நேற்று நடந்த தேர் தல் பிரசாரக் கூட டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், 02

உரிமையை...

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற இறுதி தேர்தல் பிரசார கூட்டத்தில் உரை யாற்றியபோது இவ்வாறு தெரிவித்த நீதியரசர் வடக்கு- கிழக்கின் எல்லா மாவட்டங்க ளிலும் தனது தலைமையிலான கூட்ட ணியை அமோக வெற்றியடைய செய்யு மாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இம்முறை தேர்தல் தமிழர் அரசியலை பொறுத்தவரையில் ஆரோக்கியமான ஒரு நிலைமையினை ஏற்படுத்தி இருப்பதாகவும் இரண்டு வகைகளில் முக்கியத்துவம் மிக்க தாகவும் தனதுரையில் குறிப்பிட்டுள்ள விக்னேஸ்வரன் அதுபற்றி விளக்கம் அளித் துள்ளார்.

வாக்களிப்புக்கு இன்னமும் 2 நாட்கள் மட்டுமே இருக்கின்றன. பிரசாரங்கள் இன்றுடன் (நேற்று) முடிவுக்கு வருகின்றன. எமது இறுதி பிரசார கூட்டத்தில் நான் உங்க ளுடன் பேசிக்கொண்டிருக்கின்றேன். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முன்னெப் போதும் இல்லாதவகையில் இம்முறை தேர்தல் இரண்டு வகைகளில் முக்கிய த்துவம் மிக்கதாக அமைகின்றது.

முதலாவதாக, வரலாற்றுப் பட்டறிவு களின் அடிப்படையிலும் சமகால உலக நடைமுறைகளின் அடிப்படையிலும் தமிழ் மக்கள் தமக்கான இறுதித் தீர்வு தொடர்பில் தீர்க்கமான ஒரு செய்தியினை வெளிப்ப டுத்தும் தேர்தலாக இத் தேர்தல் அமை கின்றது.

சர்வதேச ரீதியான ஒரு சர்வஜன வாக்கெ டுப்பை நடத்தி தாம் விரும்பும் தீர்வை ஏற்படுத்த ஆவன செய்யுமாறு சர்வதேச சமூகத்துக்கு ஒரு தீர்க்கமான ஒரு செய்தி யினை சொல்வதற்கு எமது மக்கள் தயாராகி வருகிறார்கள்.

இலங்கையின் இன முரண்பாட்டு வட்ட த்தில் இது ஒரு முக்கிய பரிமாணமாக மிளிர்ந்துள்ளது. எமது மக்களின் இந்த செய்தி, எமது பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் காலத்தில் இந்தியா, ஐ. நா மற்றும் சர்வதேச சமூகத்தின் நகர்வுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது எமது நம்பிக்கை.

இரண்டாவதாக, தமிழ் அரசியல் செய றபாடுகளில் ஓர் ஆரோக்கியமான பரிமாண த்தை ஏற்படுத்தும் தேர்தலாகவும் இம்முறை தேர்தல் அமைந்துள்ளது. கடந்த காலங் களை போல அல்லாமல் வெறுமனே ஒற் றுமை என்ற கோஷத்தின் அடிப்படையில் எமது மக்களை குருட்டுத்தனமாக (தமிழ் தேசிய கூட்டமைப்பை) ஆதரிக்க செய்த நிலைமையில் இருந்து அரசியல் கருத்து வினைப்பாட்டு செயன்முறையின் ஊடாக தமது பிரதிநிதிகளை மக்கள் தெரிவுசெய் வதற்கு இம்முறை தேர்தல் வழிவகுத் திருக்கிறது.

வடக்கு கிழக்கில் எமக்கு ஒரு அமோக வெற்றியை நீங்கள் பெற்றுத்தரவேண்டும். இந்த வெற்றி எமது நீண்டகால அரசியல் போராட்டத்திலும், உங்கள் வாழ்க்கையிலும் நல்லதோர் மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்தும்.

எனதருமை மக்களே, எந்த ஒரு வாக் கையும் பயன்படுத்தாமல் வீணடித்து விடா தீர்கள். பயன்படுத்தப்படாத உங்கள் வாக் குகள் உங்கள் வாழ்க்கைக்கு எதிராக தொழிற்படும் என்பதை நினைவில் கொள் ளுங்கள்.

புலம்பெயர் தமிழ் மக்களே, வடக்கு- கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக் களே, உங்கள் உறவுகளை தொடர்பு கொண்டு நாளைமறுதினம் 5ஆம் திகதி மறவாமல் வாக்களிக்க செல்லுமாறு கோருங்கள்.

எனது வாழ் நாளின் பெரும்பகுதியில் நீதிமன்றங்களின் ஊடாக நூற்றுக்கண க்கான தீர்ப்புக்களை வழங்கிய நான் இன்று மக்கள் நீதிமன்றத்தின் முன்பாக ஒரு தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கின்றேன். நீங்கள் வழங்கும் இந்த தீர்ப்பு ஒரு நல்ல மாற்றத் துக்கான திறவுகோலாக இருக்கும் என்ப திலும் முழு உலகத்தையும் உங்களை நோக்கி திரும்ப வைக்கும் என்பதிலும் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது என்றார். (ஞா)

வடமாகாண...

தாக தேர்தல் கண்காணிப்புக்கான தன்னார்வ முயற்சி அமைப்பு (வியூ) தெரிவித்துள்ளது.

தேர்தல் கண்காணிப்புக்கான தன்னார்வ முயற்சியின் ஒன்றிணைந்த செயற்குழு உறுப்பினர் ஆதில் அலி சப்ரி, வட மாகாண அலுவலகத்தில் இடம்பெற்ற தேர்தல் கண்கா ணிப்பாளருடனான சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக் கையில், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக நாடளாவிய ரீதியில் 3000இற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும், அவற்றில் அரைவாசிக்கு அதிகமானவை வட மாகாணத்தில் பதிவாகியுள்ளது. அந்த வகையில் வடமாகாணத்தில் 1800 முறைப் பாடுகள் பதிவாகியுள்ளது என்றார். (ஞா)

ஏகாதிபத்திய...

செல்ல வேண்டும் என்று தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிர மசிங்க , நாட்டின் பொருளாதாரத்தை ஐக்கிய தேசிய கட்சியால் மாத்திரமே மீள கட்டியெ முப்ப முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பொன் றில் கலந்துகொண்ட போதே அவர் இத னைத் தெரிவித்தார். (ஞா)

பதவி வெற்றிடம்

தமிழ் ரைப்பிங், பக்க வடிவமைப்பு மற்றும் விளம்பர வடிவமைப்புச் செய்யக் கூடியவர்கள் (இருபாலாரும்) தேவை. யாழ்.நகருக்கு அண்மையாக உள்ளவர்கள் நேரில் சமுகம் தரவும்.

பொது முகாமையாளர்,
இல. 03, 02 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

PERSONAL GROUP CLASS
இரசாயனவியல்
(A/L) 2020, 2021, 2022, Repeat Batch
கடந்த கால Past Papers கற்பிக்கப்படும்.
சி. அங்கதன்
B.Sc. (Chem.Spl.) (3458)
தொடர்பு: 075 436 4510

சமையல் வேலையாள் தேவை
யாழ். நகரில் வீடொன்றுக்கு சமையல் வேலைக்கு மட்டும் வேலையாள் தேவை. (3457)
077 918 4988

தேவை
மன்னார், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் நகர்ப் பகுதிகளில் கடைக் கட்டடம் வாடகைக்குத் தேவை. (3469)
தொடர்புகளுக்கு
077 266 6429
076 700 1072

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமை போல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● கனகராயன்குளம் ● மாளிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-9624)
0768226240

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

வரலாறு பாட வகுப்புக்கள்
6ம் வகுப்பிலிருந்து O/L வகுப்பு வரை வரலாறு பாட வகுப்புக்கள் தனிப்பட்ட ரீதியிலும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு (3464)
076 057 6368, 077 290 3762

மீண்டும்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-9976)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

மரண அறிவித்தல்

திருவாளர்

தியாகர் திருநாவுக்கரசு

(ஓய்வுநிலை வைத்திய கலாநிதி, சட்டத்தரணி, முன்னாள் நயினை நாகபூஷணி ஆலய அறங்காவலர் சபைத் தலைவர்)

தோற்றம்	மறைவு
12.01.1934	02.08.2020

யாழ்.நயினாதீவு 2ம் வட்டாரம் தியாகர்பதியை நிரந்தர வதிவிடமாகவும் யாழ்.கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தியாகர் திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (02.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகர்-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி-நாகம்மர தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் பாசமிகு கணவரும் சுபோதினி, தியாகராஜன்(லண்டன்), செம்மனச்செல்வி (ஆசிரியை-யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சிவநேசன்(சக்தி வீடியோ-சுவிஸ்), ஜீவமணி(டென்மார்க்), அலெக்ஸ்சாண்டர் பிளேமிங்(அலெக்ஸ் வீடியோ-ஜேர்மனி), சுரேந்திரன் (Spectrum இசைக்குழுப் பாடகர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான உருத்திரகுமாரன்(ஆசிரிய ஆலோசகர்), உமாகரன் மற்றும் நவரஞ்சனி(லண்டன்), கலாதரன்(கலா வீடியோ-டென்மார்க்), மாலினி(ஜேர்மனி), சுஜாதா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசம்மா, சாமிநாதன், அருணாசலம், மீனாட்சி, வாலாம்பிகை மற்றும் விசாலாட்சி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கௌரிசங்கர்(பிரான்ஸ்), அபிராமி (USA), தினேஸ் , கிரிஷாயினி (லண்டன்), தங்கீர்த்தனன், மேனாளனன்(நகர அபிவிருத்தி அதிகார சபை), சினேகா, சாரதிகா, சாயித் (சுவிஸ்), விவேகா, அஸ்வின், மகேஸ்கா (டென்மார்க்), சாம்பவி, ஹரிசன் (ஜேர்மனி), சங்கீதன், இராகவன், கீர்த்திகன், மதுரகன், பார்வதி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் சஞ்சீவன் (USA), மதுரா (வவுனியா) ஆசைப்பேரனும் ருத்திராவின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்ற கமலம் (யாழ்.நீராவியடி) அவர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மனோரஞ்சிதம் (அவுஸ்திரேலியா) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2020) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பின்னர் நயினாதீவு தியாகர்பதி இல்லத்தில் பிற்பகல் 2.30 தொடக்கம் 4.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (3467)

இல.146, கொக்குவில் மேற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.